இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ்—429 ● 1993 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான
நான்காம் அகிலத்தின் இலங்கை கிளை

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்**
**25 ஆண்டு நிறைவு**
**1968-1993**

ஆண்டு நிறைவுக் கூட்டம்: 1993 ஜூன் 27
கொழும்பு பொது நூலக கேட்போர் கூடம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்-இளம் சோஷலிஸ்டுகள்

# 1993: புரட்சிக் கட்சியை நிர்மாணிக்கும் ஆண்டு

## பு. க. க. மத்திய குழுவின் அறிக்கை — 1993 ஜனவரி 01

1993 ஜூனுடன் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நீண்ட அரசியல் போராட்டத்துக்கு 25 ஆண்டுகள் பூர்த்தியாகுவதைப் புரட்சிகரப் பெருமிதத்துடன் கூறிவைக்கின்றோம்.

நான்காம் அகிலம் ஸ்தாபிதம் செய்யப்பட்டு 55 ஆண்டுகள் நிறைவு பெறும் இவ்வாண்டில் சகல வகையறாவைச் சேர்ந்த தேசியவாதச் சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக நான்காம் அகிலத்தின் உலக சோசலிச முன்னோக்கையும், வேலைத் திட்டத்தையும் பேணிக்காக்கும் பொருட்டு 1953ல் நிறுவப்பட்ட அனைத்துலகக் குழுவின் தணியாத போராட்டத்துக்கு 40 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது.

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் கிளை என்ற முறையில் புரட்சிக் கட்சியை இலங்கையிலும், இந்தியத்துணைக் கண்டத்திலும், ஆசியாவிலும் கட்டி எழுப்பி ஊர்ஜிதம் செய்யும் தீர்க்கமான அண்டாக கொண்டு, 1993ல் போராட்டத்துக்குக் கிளர்ந்தெழும்படி 'தொழிலாளர் பாதை' 'சம்கறு மாவத்த' வாசகர்களையும் தொழிலாளி வர்க்க— ஒடுக்கப்படும் மக்களின் சகல போராளிகளையும் நாம் அழைக்கின்றோம்.

1990களின் தசாப்தம், யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பு சரிந்து கொட்டியதுடன் ஆரம்பமாகியது. அதன் காரணமாக உலகம் பூராவும் ஏகாதிபத்திய யுத்தத்தினதும், உள்நாட்டு யுத்தத்தினதும் புரட்சிகளதும் புதிய காலப்பகுதி திறந்துள்ளது. ஏகாதிபத்தியத்தினை இந்தப் பூகோளத்தில் இருந்து துடைத்துக் கட்டத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுக்குத் தொழிலாளி வர்க்க அனைத்துலகவாத தலைமையைத் தயார் செய்யும் நான்காம் அகிலம், இதனை ட்ரொட்ஸ்கிசத்தின் தசாப்தம் என பெயரிட்டு அழைக்க காரணம் அதுவே.

ஏகாதிபத்திய யுத்தங்கள், காலனிகளை முன்னிட்டு இராணுவ—பாசிச சர்வாதிகாரங்களைத் திணிப்பதன் ஊடாகப் புதிய உலக அமைப்பினை நிர்மாணிக்கத் துடித்துக் கொண்டுள்ள பிற்போக்கு ஆட்சியாளர்கள் நாட்டுக்கு நாடு தொழிலாளி— ஒடுக்கப்படும் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றார்கள். இன்று வளர்ச்சி கண்டுள்ள உற்பத்திச் சக்திகளின் மட்டத்தின் படி முதலாளித்துவ உலகச் சந்தை அதற்குப் பெரிதும் சிறிதாகி விட்டது. உலக ஜனத்தொகை, பிற்போக்கு இலாபப் பகற்கொள்ளைக்கு ஈடுகொடுக்க முடியாத அளவுக்கு அதிகரித்து விட்டது. தனிச் சொத்து உரிமையையும் தேசிய அரசு அமைப்பையும் தூக்கி வீசி, நிர்மாணிக்கும் உலக சோசலிசத்தின் கீழ் மட்டுமே உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தியையும் மனித இனத்தின் நலனுக்காக முற்போக்கான முறையில் ஈடுபடுத்த முடியும்.

### இராணுவ ஆக்கிரமிப்பு

பனாமாவிலும் பின்னர் ஈராக்கிலும் இன்று சோமாலியாவிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமையில் இடம் பெற்றுள்ள இராணுவ ஆக்கிரமிப்புக்களும், ஸ்டாலினிச அதிகாரத்துவங்களில் இருந்து தோன்றிய கொம்பிரதோர் கும்பல்களைப் பாவித்து முன்னைய சோவியத் யூனியனை உடைத்து தகர்த்து எறியவும் யூகோசலாவிய பிராந்தியத்தினை இன, மத

(10ம் பக்கம் பார்க்கவும்)

# தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சிதறுண்டது

நீண்டகாலமாகக் கரைந்து வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமீபத்தில் வெடித்துச் சிதறியது. இதுகாறும் இ. தொ. கா. அங்கத்தவர்களாக இருந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமையிலான தோட்டத் தொழிலாளர் சங்கத்தினை விட்டு விலகிச் செல்ல முடிவு செய்துள்ளனர்.

இ. தொ, கா, வின் பிற்போக்கு அதிகாரத்துவத்தின் ஒரு பிரிவினர் அதிலிருந்து பிரிந்து, தொழிலாளர்களை தோட்டத் தொழிலாளர்களின் யமனாகப் பேர்போன காமினி திசாநாயக்கவின் பிடிக்குள் கொண்டு சென்றுள்ளனர், எனினும் இச்சம்பவம், இ. தொ. கா. வின் வெடிப்பின் புறநிலை முக்கியத்துவத்தினை எந்தவிதத்திலும் குறைத்து விடாது, சிதறுண்டு போகத் தொடங்கியுள்ள இ. தொ. கா. வை மீண்டும் ஈயம் காய்ச்சி ஒட்டுப் போட்டு விட முடியாது. அவ்வாறே எதிர்காலத்தில் தொண்டமானையும் அவரது தொழிற்சங்கத்தையும் விட்டுப் பிரிந்து செல்லும் இலட்சக் கணக்கான தொழிலாளர்களை இந்தப் பிற்போக்குத் தலைவர்கள் தமது கைப்பிடிக்குள் வைத்திருப்பதும் முடியாத காரியமாகும், ஆனால் இ, தொ. கா. வின் வெடிப்பின் புரட்சிகர விளைவுகளைத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையணியினர் புரிந்து கொள்வது முக்கியம்.

டிசம்பர் கடைப்பகுதியில் இ. தொ. கா. வில் இருந்து விலகிய தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் பிணைத்து விடுவதில் இச்சங்கத்தின் மாஜி அதிகாரத்துவங்களில் ஒரு பகுதியினர் வெற்றி கண்டுள்ளனர். இதற்குக் காரணம், சமசமாஜ— ஸ்டாலினிச—நவசமசமாஜ தலைவர்களின் துரோகம் அன்றி வேறொன்றும் அல்ல.

தோட்டத் தொழிலாளர்களை தொண்டமான் தலைமையுடன் பிணைத்துவிட—சிறப்பாக 1964ன் மாபெரும் காட்டிக் கொடுப்பில் இருந்து—உதவிய சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ துரோகிகள்—இன்று ஜயவர்த்தன— பிரேமதாச ஜனாதிபதிகளின் ஆட்சிக்கு வெளிவெளியாக வக்காலத்து வாங்கியதன் மூலம் தோட்டத் தொழிலா

(10ம் பக்கம் பார்க்கவும்)



தோழர்:
கீர்த்தி பாலசூரிய
நினைவு தினக் கூட்டம்
பக்கம் — 3

பத்தாண்டு கால
தமிழின சங்கார
யுத்தம் உக்கிரம்
பக்கம் — 2

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாண்டு கால இனவாத யுத்தம் உக்கிரம்

வட—கீழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான யூ. என். பி. அரசாங்கத்தின் இடையீடற்ற இனவாத யுத்தம் பத்தாண்டுகளை எட்டியுள்ளது. 1983ல் நாடு பூராவும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராகப் படுகொலைகள், கற்பழிப்புக்கள், கொள்ளைகளுடன் ஆரம்பமான இனவாத யுத்தம், வருடாந்தம் உக்கிரம் கண்டு, இன்று பொது ஜனங்களை ஒரே இடத்தில் நூற்றுக்கணக்கில் கொன்று தள்ளும் காட்டுமிராண்டி மட்டத்துக்கு உயர்ந்துள்ளது.

இவ்வாண்டு, ஜனவரி 2ம் திகதி கிளாலிப் படகுச் சேவைக்கு எதிராகக் கடற்படையினர் நடாத்திய தாக்குதலினால் சுமார் நூறு பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் ஆரம்பமாகியுள்ளது.

கொலை செய்யப்பட்டவர்களுள் கிளிநொச்சி கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி ஆறுமுகம் தர்மராஜாவும் (51 வயது) ஒருவர். கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் வெளியிட்டுள்ள விபரங்களின்படி கடற்படையினரால் கொலை செய்யப்பட்டு இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள சிலரின் பெயர்கள் வருமாறு: எஸ் சுப்பிரமணியம் (57 வயது, ஓய்வுபெற்ற பொலிஸ் சாரதி) எஸ். பாலசுப்பிரமணியம் (40 வயது, பேக்கரி உரிமையாளர், கொடிகாமம்) எஸ். பரமேஸ்வரி (42 வயது, சொக்குவில்) தி. மகேஸ்வரி (48 வயது) தி. நளினி (மகள் 20 வயது - ஆசிரியை, கிளிநொச்சி) கோபால பிள்ளை (40 வயது, தேநீர்க் கடை சொந்தக்காரர், பூநகரி) அ. அன்னம்மா (36 வயது பண்டத்தரிப்பு) வி, செல்லத்துரை (28 வயது. மன்னார் நீதிமன்ற ஊழியர்) இப்பெயர்ப் பட்டியல் எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி பொது மக்கள் பயணம் செய்து கொண்டிருந்த படகுகளுக்கு கடற்படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த மக்கட் படுகொலையின் போது படகில் இருந்து கடலில் பாய்ந்து உயிர் தப்பிய ஒருவர் பத்திரிகை நிருபருடன் பேசுகையில் அந்தப் பயங்கரப் பயணத்தைப் பற்றி கூறியதாவது: ''நான் பயணம் செய்த படகுடன் மேலும் இரண்டு படகுகள் ஏரி வழியாக இரவு வந்து கொண்டிருந்த பொழுது கடற்படைப் படகு ஒன்று எங்கள் படகுகளுக்கு அருகில் திடீரென வந்தது. நிற்குமாறு எங்களுக்கு உத்தரவிட்டனர். படகோட்டிகள் படகை நிறுத்தினர். திடீரென டோச் வெளிச்சம் எங்கள் படகுகள் மீது படரவிடப்பட்டன, கூடவே டுமீர், டுமீர் என்ற துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கும் சத்தம் கேட்டது.

''எனது படகில் இருந்தவர்கள் ஐயோ என்று அலறியபடி விழுந்தனர் நானும் விழுந்துவிட்டேன், இதே போலவே மற்றப் படகுகள் மீதும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படகோட்டிகள் கடலுக்குள் குதித்துவிட்டனர். எங்கள் படகையும் மற்றுமிரு படகுகளையும் பிணைத்து கடற் படையினர் இழுத்துச் சென்றனர். கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது. இந்த நிலையில் எமது படகு அந்தப் பிணைப்பில் இருந்து விடுபட்டு கடல் அலையால் அடிபட்டு அலைமோதியது, படகோட்டி ஒருவர்... எமது படகை கரைப்பக்கம் வலித்துச் சென்றார். மற்ற இரு படகுகளும் கடற்படையினால் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது, அங்கிருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது''

இதுவரை 16 பேரின் சடலங்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு கடும்காயமடைந்த 7 பேர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்,

## மனிதக் கேடய கதையளப்பு

அப்பாவி பொது மக்களை இங்ஙனம் படுகொலை செய்து கொண்டுதான் இந்த அரசாங்கம் எதுவித வெட்கமும் இன்றி விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருவதாகக் கூறிக்கொள்கின்றது. யூ. என். பி. அரசாங்கத்தின் இன்றைய இனவாத யுத்தம் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரானது என்பதை இப்படுகொலைகள் எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி நிருபித்துள்ளன. பொதுமக்களை இங்ஙனம் மனம்போன போக்கில் கொலைசெய்து வரும் அரசாங்கம் இந்நாட்டிலும் அவ்வாறே வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடாத்தி வரும் பல்வேறு அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளும் அதே உண்மையை நிருபிக்கின்றது.

சிங்கள—தமிழ் முதலாளிகள் பொதுமக்களின் பிணங்களின் மேலாக தத்தம் இலாபப் பொதிகளைக் காக்கும் வீதாசாரம் பற்றிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் ஒரு ஒதுக்குப் புறமான வழியாக ஆபத்தான படகுச் சேவைப் பயணத்திற்கு மக்கள் தள்ளப் பட்டதற்கு இந்த இனவாத யுத்தமே காரணம், ஆனையிறவுப் பாதையைத் திறப்பதில் அரசாங்கப் படைகள் தோல்வி கண்டுள்ளன. அப் பாதை நெடுகிலும் நிலக் கண்ணி வெடிகள் புதைக்கப் பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர்களே கூறிக் கொள்கின்றனர். அந்தப் பாதையைப் பாவிக்கும் வண்ணம் மக்களுக்கு ஆலோசனை வழங்குவதன் நோக்கம் பொது மக்களைக் கொண்டு கண்ணி வெடிகளைப் பரிசோதிப்பதை அரசாங்கம் தனது திட்டமாக்கிக் கொண்டுள்ளதே. இந்தத் திட்டத்தின்படி தமிழ் மக்கள் செய்யவேண்டியது என்ன? தமது உயிர்களைப் பலியிட்டு வடக்கே இனவாத அரசுப் படைகளைத் தருவிக்கப் பாதை திறப்பதே! இந்த அறிக்கையை வெளிவெளி யாகவே கூறி வைப்பதற்கு பிரேமதாச ஆட்சி எவ்வளவு தூரம் அலுகோசு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும?

யுத்த ஏற்பாடுகள் உக்கிரமடைய உக்கிரமடைய அரசாங்கப் படைகளுக்கு இடையேயான அவலங்களும் உக்கிரம் கண்டுள்ளன. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான அறிக்கையின் படி 1992ல் யுத்தத்தில் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 1157.



1983 ஜூலை தமிழின படுகொலைகளைத் தொடர்ந்து தமிழ் பல்கலைக் கழக மாணவர்கள் யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத தாக்குதல்களுக்கு எதிராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடாத்திய சாகும்வரை உண்ணா விரதப் போராட்டம்.

தரைப்படை, விமானப்படை, கடற்படைகளின் உயர் அதிகாரிகளும் இதில் அடங்குவர். மேலும் 2000 பேர் காயமடைந்துள்ளனர். இப்புள்ளி விபரங்களினபடி தினசரி இராணுவத்தினரில் 10 பேர் இறந்தோ அல்லது காயமடைந்தோ உள்ளனர். இத்துடன் நின்றுவிடாது ஆயுதப் படைகளில் இருந்து ஓட்டமெடுப்பவர்களின் எண்ணிக்கை மாதாந்தம் 250க்கும் அதிகம். இதை இராணுவத் தளபதிகளே வாய்விட்டுக் கூறியுள்ளார்கள். எந்தவொரு பிற்போக்கு ஆட்சியாளரும் சரி புள்ளி விபரங்களை வெளியிடுகையில் தமது நலனுக்கு வாய்ப்பான முறையில் உரித்து திரித்து வெளியிடுவதே வழக்கம். ஆதலால் அதைக் கருத்தில் கொண்டு பார்க்குமிடத்து இவை எந்தவொரு இராணுவத்தினையும் நிச்சயம் கிலியடையவே செய்யும்.

இருந்த போதிலும் ஆளும் வாக்கத்திறகும் யூ. என். பி. அரசாங்கத்துக்கும் யுத்தம் அவசியம். எனவேதான் அவர்களின் அவலங்கள் அதிகரிக்க அதிகரிக்க காட்டுமிராண்டித் தனங்களும் கூடவே அதிகரிக்கின்றன.

புதிய உலக அமைப்புக்களை நிறுவும் பேரில் நாடுகறளை ஆக்கிரமிப்பதில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் லத்தீன அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்காவில் அமுல் செய்துள்ள காலனிததுவத்தின் காட்டுமிராண்டித் தனத்தினைக் காலனித்துவத்தின் ஏகாதிபத்தியச் சார்பு கொம்பிரதோர் முதலாளிகள் தத்தம் நாட்டினுள் ஒடுக்கப்படும் மக்கட் குழுக்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டுள்ளன.

இதன்படி போக்குவரத்து வழிகளை இழுத்து மூடி, துப்பாக்கி குறிவைத்தபடி தமிழ் மக்களை வடக்கு மாகாணத்துக்குள் அடைத்து மூடி, பஞ்சத்துக்குப் பலியிடும் திட்டம் அமுலில் உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொருட்களின் விலை மக்கள் எட்டியும் பிடிக்க முடியாத கட்டத்தை அடைந்துள்ளது. பொருட்களின் 'சுதந்திர' போக்கு வரவு தடை செய்யப்பட்டு அவை ஆயுதப் படைகளின் கரங்களுள் வந்ததைத் தொடர்ந்தே இந்த அழிவு ஏற்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் லிட்டர் ரூபா. 135/- ஆகவும் அரிசி கிலோ ரூபா. 50/- ஆகவும் உயர்ந்துள்ளது.

கிளாலி போக்கு வரத்தின் 'சுமுக' நிலைமையை எதிர்பார்த்து இருகரையிலும் காத்துக் கிடக்கும் மக்கள் தொகை பல்லாயிரக் கணக்காக அதிகரித்துள்ளது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் தபால, பார்சல் 'தரம் பிரிப்பு' கூட்டுப் படைத் தலைமையகத்தின் பொறுப்பில் வந்ததில் இருந்து தபால் போக்கு வரததும் கூடவே ஸ்தம்பித்துப் போயுள்ளது.

இது நான்கு புறத்தில் இருந்தும் மக்களைச் சுற்றிவளைத்து அழித்தொழிக்கும் காட்டுமிராண்டி நடவடிக்கையன்றி வேறென்ன? மக்களை ஆயிரக் கணக்கில் சுடுகாட்டிற்கு இட்டுச் செல்லும் இந்த யுத்தத்தின் பேரால் அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாக்களை செலவிட்டு மேலும் மேலும் ஆயுதங்களைக் குவித்து வருகின்றது. அப்படியிருந்த போதிலும் இராணுவப் பிணக்குவியல்கள் வளரவே செய்கின்றது. ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் முழு ஆதரவுடன் இடம் பெறும் இந்த இனவாத யுத்தம் வடக்கு- தெற்கு இரண்டிலும் உள்ள தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களுககு ஒரே விதத்தில் அழிவினை உண்டுபண்ணும் விதத்தில் நடைபெறுகின்றது,

இலட்சக் கணக்கில் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்வதும், விலைவாசிகளை உயர்த்துவதும், சம்பள உயர்வு வழங்க மறுப்பதும், உதவி மானியங்களின் வெட்டும்

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோழர். கீர்த்தி பாலசூரிய நினைவு தினக் கூட்டம்:

# ''தோழர். கீர்த்தியை நினைவு கூர்வதானது இந்தியத் துணைக்கண்ட புரட்சிகர பொறுப்புக்கு தோள்கொடுப்பதாகும்''



கீர்த்தி பாலசூரிய

''தோழர், கீர்த்தி பாலசூரியவை நினைவு கூர்வது என்பதன் அர்த்தம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தியத் துணைக் கண்டத்தில் புரட்சிகரப் பொறுப்புக்களுக்குத் தோள் கொடுப்பதாகும்.''

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராக விளங்கி 1987 டிசம்பர் 18ம் திகதி காலமான தோழர். கீர்த்தி பாலசூரியவின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி பு. க. க, கொழும்பு அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் பேசிய அதன் பொதுச் செயலாளர் தோழர். விஜே டயஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1992 டிசம்பர் 22ம் திகதி நடைபெற்ற இந்நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது: ''அந்தப் புரட்சிகரப் பொறுப்புக்களுக்குத் தோள் கொடுக்கும் பொருட்டு சிறப்பாக இளைஞர்கள் முழு வாழ்க்கையையும் புரட்சியாளர்களாகப் பயிற்சி பெறுவது அத்தியாவசியம். தோழர். கீர்த்தியை நினைவு கூரும் முகமாக அநேக நாடுகளிலும் —பல கண்டங்களிலும் அனைத்துலகக் குழு கூட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது. இது அவர் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்துக்கு மட்டுமன்றி உலகத் தொழிலாளி வர்க்கத்தினதும் தலைவர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இந்த விதத்தில் அனைத்துலகத தொழிலாளி வர்க்கத்தின் கௌரவத்தைப் பெற்ற வேறு அரசியல் தலைவர் சமீபகாலத்தில் இருந்ததுண்டா?'' என தோழர். விஜே டயஸ் கேட்டார்.

## உலக நிலைமை

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய சமரசத்துக்கு இணங்கிப்போய் 'உலக நிலைமையானது ஏகாதிபத்திய முகாமுக்கும் ஸ்டாலினிச முகாமுக்கும் இடையேயான மோதுதல் மூலம் நிர்ணயம் செய்யப்படுகின்றது' என்ற பப்லோவாத திரிபுவாதிகளின் சூத்திரத்தை விளக்கிய விஜே டயஸ், அன்று நான்காம் அகிலத்தின் அமெரிக்கக் கிளையான சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (S.W.P.) தலைவர் ஜேம்ஸ். பீ.கனனின் தலைமையில் பப்லோவாத திரிபுவாதத்துக்கு எதிராக 1953ல் இருந்து அனைத்துலக குழு நடாத்திய போராட்டத்தினைத் தெளிவு படுத்தினார்.

ட்ரொட்ஸ்கிசத்தின் தொடர்ச்சியைப் பேணும் விதத்தில் பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டத்தினை விபரிக்கையில் விஜே டயஸ் கூறியதாவது: ''கியூபாவினுள் குட்டி முதலாளித்துவ காஸ்ட்ரோ ஆட்சிக்கு வந்ததைச் சாட்டாகக் கொண்டு சமசமாஜக் கட்சி, லெஸ்லி குணவர்த்தனவின் தூண்டுதலின் கீழ், 1963ல் அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி பப்லோவாதிகளுடன் மீண்டும் ஒன்றுபட சென்றது, அன்று இந்த மறு ஒன்றிணைவுக்கு எதிராக அனைத்துலகக் குழுவின் பிரித்தானியப் பகுதியான சோசலிச லேபர் லீக்கின் தலைவர் ஜெரி ஹீலி தலைமை தாங்கினார்''


ஆனால் 1970 பதுகளில் இருந்து ஹீலி — பண்டா — சுலோட்டர் தலைமை ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கையைப் படிப்படியாகக் கைவிட்டு, பப்லோவாதிகளின் திசையில் பயணம் செய்தமைக்கு எதிராக அனைத்துலக குழுவின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நடாத்திய தீர்க்கமானதும், நீண்டதுமான போராட்டத்தில் தோழர். கீர்த்தியின் அரசியல் பாத்திரத்தினைக் குறிப்பிடுகையில் தோழர். விஜே தொடர்ந்து கூறியதாவது:

''...தோழர் கீர்த்தி தமது வாழ்நாளின் இறுதிக் காலத்தை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்குப் பத்திரத்தினை வரைவதில் அனைத்துலகக் குழுவின் ஏனைய தலைவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டார். 1988 ஆகஸ்டில் வெளியிடப்பட்ட இம் முன்நோக்கு இன்று உலக நிலைமையின் உள்ளே எவ்வளவுக்கு சக்திவாய்ந்த முறையில் நிரூபணமாகியுள்ளது?'' என அவர் கேட்டார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினரும் தோழர். கீர்த்தியின் சகாவுமான தோழி. விலானி பீரிஸ் பேசுகையில் ''...1964ல் 16வயதில் அவர் லியொன் ட்ரொட்ஸ்கியின் 'கலாச்சாரமும் சோசலிசமும்' என்ற நூலைப்படித்ததில் இருந்து ட்ரொட்ஸ்கி, மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் உள்ளடங்கலான மார்க்சிச தலைவர்களின் நூல்களை ஆய்வு செய்யத் தொடங்கினார், அரசியலில் ஈடுபட்டு எந்த வேளையில் அவர் சிறப்பாக ஜேர்மனியினுள் பாசிசத்தின் எழுச்சிக்கு எதிராக ட்ரொட்ஸ்கி எழுதிய அநேக கட்டுரைகளைப் படித்தார்,

''...1964ல் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக்கொடுப்புக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் சேர்ந்து 1953ம் ஆண்டின் போராட்டத்தின் படிப்பினைகளை தோழர். கீர்த்தி மிகவும் நெருக்கமான முறையில் ஆய்ந்தார். கீர்த்தி ஸ்டாலினிசம், பப்லோவாதம், தேசிய முதலாளி வர்க்கம் மற்றும் தேசிய வாதத்தின் சகல போக்குக்களதும் கடும் எதிரியாக விளங்கியவர். அவரின் அரசியல் போராட்டம், கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் நான்கு காங்கிரசுகளது பத்திரங்களையும் லியொன்ட்ரொட்ஸ்கி ஸ்தாபிதம் செய்த நான்காம் அகிலத்தின் போராட்டங்களையும் நான்காம் அகிலத்தை உடைக்கும் பொருட்டு செயற்பட்ட பப்லோ வாதத்துக்கு எதிராக 1953ல் இருந்து அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.'' என்றார்.

தோழர். கீர்த்தி பாலசூரியவின் மரணச் சடங்கில் உரையாற்றிய அமெரிக்க வேர்க்கஸ் லீக் தேசியச் செயலாளர் தோழர். டேவிட் நோர்த்தின் உரையை நினைவுகூர்கையில் பு,க.க. மத்திய குழு உறுப்பினர் தோழர், எம். அரவிந்தன் கூறியதாவது: ''இந்த ஆசிய பிராந்தியத்தில் மார்க்சிசத்தின் அபிவிருத்திக்காக போராடியது மாஓ சேதுங்கோ அல்லது ஹொசிமினோ அன்றி தோழர். கீர்த்தி பாலசூரியவே''. என்றார். அனைத்துலகப் பணிக்கு அவர் கொடுத்த முதலும் முக்கியமுமான இடத்தினை சுட்டிக் காட்டுகையில் அரவிந்தன் மேலும் கூறியதாவது: ''இலங்கையினுள் கட்சியின் அரசியல் பணிகளுக்கென மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான தமிழ் தோழர்களே இருந்துவந்தனர். அந்நிலையிலும் இந்தியாவினுள் ட்ரொட்ஸ்கிசக் கட்சிக்கு அத்திவாரமிடும் பொருட்டு தோழர். கணேசை இந்தியாவுக்கு அனுப்பும் விதத்தில என்னைக் கட்சியின் முழு நேர அங்கத்தவனாகும்படி கீர்த்தி வேண்டினார். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளை இந்தியத் துணைக் கண்டத்தில் ட்ரொட்ஸ்கிசத் தலைமையைக் கட்டியெழுப்பும் பணியின் ஒரு பாகமாகவே அவர் கருதினார்'' என்றார்.



கீர்த்தி பாலசூரிய நினைவு தினத்தையொட்டி பு.க.க, கொழும்பு அலி, சே. ச. மண்டபத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்துக்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினர்.

பு.க.க. மத்திய குழு உறுப்பினர் தோழர். டபிள்யூ. ஏ. சுனில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பு.க,க. இளைஞர் இயக்கமான 'இளம் சோசலிஸ்டுகளின்' தேசியச் செயலாளர் தோழர். தீபால் ஜயசேகரவும் உரை நிகழ்த்தினார்.

இப்பகிரங்கக் கூட்டத்துக்கு 150 க்கும் அதிகமான தொழிலாளர், இளைஞர்கள் ஒடுக்கப்படும் மக்கள் வருகை தந்திருந்தனர். கட்சி நிதிக்கு கூட்டத்தில் ரூபா, 455- திரட்டப்பட்டது.

வாசியுங்கள்

சோவியத் யூனியனின் முடிவு

டேவிட் நோர்த்

விலை 25—00

கிடைக்குமிடம்-
90, 1வது
மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10

சோசலிச புரட்சியின் உலக கட்சியைக் கட்டி எழுப்பு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் ..........................................................

முகவரி: ..........................................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற இந்தப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமாலியா:

# காலனித்துவத்தின் மனிதாபிமான முகமூடி

நவீன ஆயுதங்களைக் கொண்ட 30000 அதிரடிப் படையினர் சோமாலியாவை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நியாயப்படுத்திக் கொண்டனர், இந்த ஆபிரிக்க நாட்டில் இருந்து வரும் பட்டினிக்கு முடிவுகட்டவே இந்த 'மனிதாபிமான' பயணத்தில் தாம் ஈடுபட்டுள்ளதாக வாஷிங்டன் ஆட்சியாளர்கள் கூறிக் கொண்டுள்ளனர்.



ஜோர்ஜ் புஷ்

பெரும் ஏகாதிபத்தியப் பத்திரிகை நிறுவனங்கள் இந்தத் தலையீட்டில் வேறு எந்தவொரு அக்கறையும் அமெரிக்காவுக்குக் கிடையாது என்ற பாணியிலேயே பேசிக் கொண்டுள்ளன. இவை எல்லாம் சோமாலியாவின் வரலாறு, சோமாலியாவில் அமெரிக்காவின் முன்னைய தலையீடுகள் அல்லது ஆசியா, ஆபிரிக்காவில் பெரும் பகுதியைப் பலிகொண்டுள்ள இன்றைய பட்டினிக்கான காரணப் பற்றி ஒரு நிஜஆய்வு அனைத்தையுமே ஒதுக்கித் தள்ளியுள்ளன,

'நடவடிக்கை நம்பிக்கை தருகின்றது' என்ற தலைப்பில்—இதையொரு குறுகிய கால நிவாரண நடவடிக்கையாகக் காட்டி ஜோர்ஜ் புஷ் ஆரம்பத்தில் வெளியிட்ட அறிக்கை ஒரு பொய்யென அம்பலப்படுத்தப் பட்டுள்ளது. இப்போது வெள்ளை மாளிகையும் அமெரிக்க காங்கிரசும், வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இந்தத் தலையீடு, அதன் காலஎல்லை படையாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் ஒரு அப்பட்டமான இராணுவ ஆக்கிரமிப்பின் ஆரம்பம் என்பதை ஒப்புக் கொண்டுள்ளன.

சோமாலியாவில் இருந்து வரும் பட்டினி நிலைமையில் அமெரிக்கத் தலையீட்டுக்கு எதிர்ப்புக் காட்டுவது நியாயமாகுமா எனச் சிலர் கேட்கலாம்? அங்கு இன்று இருந்து வரும் நிலையை மனதில் கொண்டு, அமெரிக்கப் படைகளை எதிர்ப்பது ஒரு புறக் கணிப்பாகாதா? எனவும் அவர்கள் கேட்கலாம். ஆனால் ஒரு பிரச்சினை தொடர்பான கொள்கையை வகுத்துக் கொள்கையில் ஒருவர் 'இன்று' பற்றி மட்டுமன்றி 'முன்னர்' 'பின்னர்' பற்றியும் யோசிக்க வேண்டும், ஆதலால் சோமாலியா பிரச்சினைக்கான தீர்வு, அதன் வரலாற்று வேர்களையும் அவற்றைத் தீர்க்கக் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளின் நீண்டகால விளைவுகளையும் புரிந்து கொள்வதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவுப் பொருட்களை வினியோகிப்பதன் அவசியத்தை எந்தவொரு தொழிலாளியும் அங்கீகரிக்கவே செய்வான். ஆனால் முசோலினியின் படைகள் எதியோப்பியாவினுள் அணிவகுத்துச் சென்றதில் இருந்து ஏன் சோமாலியாவிலான நிலைமைகள் மட்டும் ஆபிரிக்காவிலான மாபெரும் ஆக்கிரமிப்பின் மூலம் பதிலளிக்கப்பட வேண்டும்? இதற்குப் பதில் அளிக்க எவரும் ஒரு சிறு முயற்சி தன்னும் எடுக்கவில்லை.

ஜோர்ஜ் புஷ் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையைப் பற்றி முதலில் அறிவித்த வேளையில் சோமாலியாவின் மக்களது நிலைமை பெரிதும் மோசமடைவதைத் தடுக்கப் படைகள் அனுப்பப்பட வேண்டும் என வலியுறுத்தினார். பட்டினிப் பிராந்தியங்களுக்கான உணவுப் பொருட்களின் நகர்வு மிகவும் மந்தகதியில் இடம் பெறுவதால் பட்டினி வேகம் அதிகரித்துச் செல்வதாகவும் அவர் கூறிவந்தார். ஆனால் நிலைமை தொடர்ந்தும் மோசமாக இருந்து வருகின்றபோதிலும் கடந்த சில மாதங்களாக பட்டினியின் மட்டம் வீழ்ச்சி கண்டு செல்கின்றது என்பதும், படுமோசமான பட்டினிக் காலம் முடிவடைந்து விட்டது என்பதும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிலைமையிலேயே வாஷிங்டன் சோமாலியாவுக்கு உணவு விநியோகம் செய்வதற்குப் பொருத்தமான ஒரே ஆயுதம் பென்டகனின் பரந்த இராணுவ பலமே என வலியுறுத்தியது. இது மற்றுமோர் பொய்யாகும். அச்சமயத்தில் சோமாலியாவுக்கான நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தோரில் பலர் இவ்வாதத்தினைப் பலமாக மறுத்ததோடு, உணவு விநியோகத்தில் இருந்து வந்த அரசியல், இராணுவ தடைகளை ஏற்கனவே தாண்டிக் கொண்டுள்ளதாக அறிவித்திருந்தனர்.

தொழிலாளர்கள் சோமாலியாவில் இன்று இடம்பெற்று வரும் அமெரிக்க இராணுவக் குவிப்பின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். 30000 கடற்படை, தரைப் படையினர் ஏற்கனவே அங்கு தரையிறங்கி உள்ளதோடு, நாடு பூராவும் உஜார் நிலையில் உள்ளனர். ஆயுதம் தாங்கிய ஹெலிகொப்டர்கள் மக்களைக் குழப்பியடிக்கும் பொருட்டு தலைநகர் மொகாடிஸ்சு மேலாக அடிக்கடி பறந்த வண்ணம் உள்ளன, ஏற்கனவே இந்த விமானங்களின் ஏவுகணைத் தாக்குதல்களில் 15 சோமாலியப் பிரஜைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க டாங்கிகள் வீதிகளையும், நகரங்களையும் சுற்றி அலைந்தபடி உள்ளன. பல பகுதிகளில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. டிசம்பர் நடுப்பகுதியில் ஒரு வீதித் தடையில் தமது வாகனத்தை நிறுத்தாத ஒரு முழுக் குடும்பத்தையும் சுட்டுத் தள்ளுவதில் அமெரிக்க கடற்படையினர் பிரான்சியப் படைகளுடன் சேர்ந்து கொண்டனர். நியூயோக் டைம்ஸ் இவ் வேட்டையில் பலியான ஆண், பெண், குழந்தைகளை 'சோமாலி துப்பாக்கி காரர்கள்' எனக் குறிப்பிட்டது.

அமெரிக்க ஏகாதிபத்திய வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மட்டுமன்றி காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளின் 'தேசிய' ஆட்சியாளர்களும் சோமாலியாவின் வரலாற்றினையோ அல்லது இன்றைய நெருக்கடியையோ பற்றி மௌனம் சாதிக்க விசேட காரணம் உண்டு. இந்த சோமாலி ஆக்கிரமிப்பிலும் இவர்கள் பனாமா, ஈராக் ஆக்கிரமிப்பில் கடைப்பிடித்த பாணியையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு பெரும் பாத்திரம் வகித்த ஒரு நூற்றாண்டுகால காலனித்துவ ஒடுக்குமுறையினதும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பினதும் பெறுபேறே இன்றைய சோமாலியப் பட்டினி என்பதை வரலாறு காட்டுகின்றது. சோமாலியாவின் மக்கள்—ஏனைய சகல ஆபிரிக்க மக்களையும் போலவே ஐரோப்பிய வல்லரசுகள் கண்டத்தினை காலனித்துவ ரீதியில் கண்டதுண்டமாக்கியதன் கசப்பான பெறுபேறுகளுக்கு இன்று பலியாகிக் கொண்டுள்ளார்கள்.

# ஈக்குவடோர் ட்ரொட்ஸ்கிஸ்ட் படுகொலை விசாரணைக்கு உத்தரவு

ஈக்குவடோர் ட்ரொட்ஸ்கிச 'கொமிட்டி சோசலிஸ்டா' இயக்கத்தின் முக்கிய அங்கத்தவர்களில் ஒருவரும் பிரபல இளம் எழுத்தாளர்களில் ஒருவருமான தோழர், மார்கோ வினிசியோ பொவிடாவின் கொலை பற்றி விசாரணை நடாத்தும்படி ஈக்குவடோர் சட்டமா அதிபர் அல்விர் என்றிக் கட்டளையிட்டுள்ளார்.

ஈக்குவடோர் பொலிசாரும் மற்றும் ஆளும் வர்க்க அமைப்புக்களும் வினிசியோ பொவ்டா வாகன விபத்தில் கொல்லப்பட்டதாக அறிவித்திருந்தன. இதை பொய்யென நிரூபிக்கும் விதத்தில் 'கொமிட்டி சோசலிஸ்டா' இயக்கத் தலைவர் மார்ஸ்லோ லாறாவும், ஈக்குவடோர் மனித உரிமைகள் இயக்கசட்டத்தரணி ராமிரோ றோமனும் இது திட்டமிடப்பட்ட ஒரு கொலையென நிரூபிக்கும் விதத்திலான அத்தாட்சிப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளனர். தாக்கிவிட்டு தலைமறைவாகிய வாகனத்துடனும் சந்தேக நபர்களுடனும் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைப் பொலிசார் உண்மைக்கு மாறாகத் திரித்துள்ளதாக இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்,

அத்தோடு ஈக்குவடோர் தொழிற்சங்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் இயக்கங்கள், மற்றும் அனைத்துலக ட்ரொட்ஸ்கிச இயக்கமும் பொவ்டாவின் கொலை பற்றி ஒரு பூரண விசாரணை நடாத்தும்படி. சட்ட மா அதிபரை கேட்டுக் கொண்டிருந்தன.

பொவ்டா கடந்த ஆண்டு அக்டோபர் 31ம் திகதி அதிகாலை கொல்லப் பட்டார், 26 வயது புரட்சியாளனும், கவிஞனுமான அவர் தாம் வெளியிட்ட கவிதைகளில் இருந்து ஒரு நிகழ்ச்சி வழங்கும் பொருட்டு நகரத்துக்குச் சென்றிருந்தார். அவர் தமது கவிதைத் தொகுதியில் இருந்து ஈக்குவடோர் வலதுசாரி ஜனாதிபதி சிக்ஸ்டோ டுரான் பலனையும் குறிப்பாக ஈக்குவடோர் கலைஞர்களுக்கு எதிரான அடக்கு முறையையும் கண்டனம் செய்யும் கவிதைகளை இசைத்தார். இந்த நிகழ்ச்சி முடிவடைந்ததைத் தொடர்ந்து பொவ்டா அவனிடோ குவிட்டோ என்ற முச்சந்தியில் அவர் பயணம் செய்த ஒரு டாக்சிக்கு அருகே நின்று கொண்டிருந்தார். இக்கட்டத்திலேயே அவர் ஒரு நான்கு சில்லு 'ட்ரூப்பர்' மூலம் மோதப்பட்டார். இந்த மோதல் காரணமாக அவர் சுமார் 10 அடிக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டதோடு தலையில் படுகாயங்களும் ஏற்பட்டது. அத்தோடு இதன் காரணமாக அவரின் ஈரல் வெடித்தது. இந்த 'ட்ரூப்பர்' கூடவே அவர் பயணம் செய்த டாக்சியையும் மோதிவிட்டு அங்கிருந்து ஓடித் தலைமறைவாகியது.




1988ல் ஈக்குவடோர் தலைநகரான குவிட்டோவில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் 'கொமிட்டி சோசலிஸ்டா'வின் பதாகை

பொலிசார் இந்த குற்றத்தின் தன்மையை மூடிமறைக்கும் பொருட்டு இதனை 'விபத்து' அல்லது 'கார் மோதல்' என அழைத்தனர். அத்தோடு மோதல் இடம்பெற்ற நேரத்தையும் பொய்யான விதத்தில் குறித்தனர். இந்த வாகனத்தையோ அல்லது காரையோ கண்டுபிடிக்கப் பொலிசார் எதுவித முயற்சியும் எடுக்கவில்லை, இந்த மோதுதல் சம்பவம் இடம்

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பிராங்பேர்ட் மகாநாடு

# இனவாதத்தையும் யுத்த ஆபத்தையும் எதிர்ப்போம்! தொழிலாளி வர்க்க ஐக்கியத்தை நிலைநாட்டு!

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஜேர்மன் கிளையான 'பண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டர்' டிசம்பர் 5—6ம் திகதிகளில் பிராங்பேர்ட் நகரில் நடாத்திய மகாநாடு, ஜேர்மன் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி அனைத்துலகத் தொழிலாளர்களுக்குமே ஒரு வரலாற்று முககியத்துவம் வாய்ந்த மகாநாடாக விளங்கியது.

புலம்பெயர்ந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு எதிரான தொடர்ச்சியான இனவாத, பாசிசத் தாக்குதல்களுக்கும், உத்தியோகபூர்வமான முதலாளித்துவ, சமூக ஜனநாயகக் கட்சிகள் நவநாசிகளுக்கு அப்பட்டமாக அடிபணிந்து போன நிலைமைகளுக்கும் மத்தியில் ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நடாத்திய இம்மாநாடு, அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்துக்கான அழைப்பினை நடுநாதமாகக் கொண்டிருந்தது.

நூறுக்கும் அதிகமான தொழிலாளர்கள், தொழில் பயிலுனர்கள், பல்கலைக் கழக, பாடசாலை மாணவர்கள், கிழக்கு - மேற்கு ஜேர்மனியில் இருந்து இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். அத்தோடு பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா முதலான நாடுகளில் இருந்து விசேட பிரதிநிதிகளும் இதில் பங்கு கொண்டனர். ஜேர்மனியில் வாழும் தமிழ் தொழிலாளர்களின் ஒரு பெரும் தூதுக் குழு இம்மாநாட்டிற்கு வருகை தந்திருந்தது. கடந்த சில வருடங்களாக முன்னைய சோவியத் யூனியனில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நடாத்திவந்த அரசியல் நடவடிக்கைகளின் தாக்கம் காரணமாக கியூ நகரில் இருந்து இரு தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

50 ஆண்டுகளுக்கு முன்னர் நாசிகள் நடாத்திய இனவெறி கலகங்களின் காரணமாக இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள்— யூதர்கள், வெளிநாட்டு அடிமைத் தொழிலாளர்கள், அரசியல் கைதிகள்— கொல்லப்பட்டதன் பின்னர் பாசிசக் கும்பல்கள் மீண்டும் ஜேர்மனியில் வெளியரங்கில் தலைநீட்டியுள்ளனர். அத்தோடு வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கும், அகதிகளுக்கும், வலது குறைந்தவர்களுக்கும் எதிரான அட்டூழியங்களில் இவர்கள் இறங்கியுள்ளனர்.

ஐரோப்பாவை இடிபாடுகளின் இடமாக்கிய இரண்டாம் உலக யுத்தத்தின் அரை நூற்றாண்டுகளின் பின்னர் ஜேர்மன் முதலாளி வர்க்கம் —சமூக ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து உலகளாவிய ரீதியில் ஒருபுதிய இராணுவத் தலையீட்டுக்கான தயாரிப்புக்களில் மூர்க்கமான முறையில் ஈடுபட்டது.

கடந்த சில வாரங்களாக இலட்சக் கணக்கான மக்கள் பாசிச கும்பல்கள் மீளவும் தலை காட்டுவதை எதிர்த்தும் கோல் அரசாங்கத்தினதும் சமூக ஜனநாயகக் கட்சியினதும் இனவாத அரசியலை எதிர்த்தும் வீதிகளில் இறங்கினர். என்னதான் அரசியல் குறைபாடுகள் இருந்தபோதிலும், இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் தொழிலாளி வர்க்கத்தின் பிரமாண்டமான இயக்கத்துக்கு ஒரு முன்னோடியாக உள்ளன. பரந்த அளவிலான வேலை நீக்கங்கள், சம்பள வெட்டுக்கள், சமூக சேவைகள், ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்கள், 1930களின் பின்னர் வரலாறு கண்டு கேட்டிராத விதத்தில் வளர்ச்சி கண்டு வரும் நிலையில், பிரமாண்டமான வர்க்கப் போராட்டங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

பிராங்பேர்ட் மகாநாட்டின் முக்கியத்துவம் என்னவெனில், பேராளர்கள் எதிர் வரும் போராட்டத்துக்கான தயாரிப்பாக — இன்றைய இனவாத, தேசியவாத அலையினை விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யும் ஒரு வேலைத்திட்டத்தினைக் கலந்துரையாடியதேயாகும், ஒரு பிரேரணை வடிவில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டத்தினைப் பேராளர்கள் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

### அரசியல் அறிக்கை

B.S.A,ன் மத்திய குழு உறுப்பினரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் செயலாளருமான பீட்டர் சுவார்ட்ஸ், இன்றைய அரசியல் நிலைமையை விரிவாக ஆய்வு செய்ததுடன் மாநாடு ஆரம்பமாகியது, அவர் இந்த முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடிக்கான புறநிலைக் காரணிகளையும். பாசிச, இராணுவ வாதங்களை மீண்டும் தோற்றுவித்துள்ள பல்வேறு ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான போட்டாபோட்டிகளையும் தெளிவு படுத்தினார். அத்தோடு அவர் ஒரு ஜனநாயகப் பாரம்பரியத்தினைக் கொண்ட ஜேர்மன் முதலாளி வர்க்கத்தினை தோற்றுவித்த ஜேர்மன் முதலாளித்துவத்தின் வரலாற்றுச் சிறப்பம்சங்களுக்கும் மகாநாட்டினரின் கவனத்தை ஈர்த்தார்.

இதைத் தொடர்ந்து இடம் பெற்ற கலந்துரையாடலில் 30 பேராளர்கள் இப்பிரச்சினைகளை ஆய்வு செய்தனர். பேச்சாளர்கள் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய ஸ்டாலினிச, சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களின் எதிர்ப் புரட்சிப் பாத்திரத்தினை ஆய்வு செய்தனர்.




பிராங்பேர்டில் ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நடாத்திய மாநாடு

B S A.ன் தேசிய செயலாளர் உல்ரிச் றிப்பேர்ட் பேசுகையில் கடந்த பல வருடங்களாக் இடம்பெற்ற உலக உற்பத்தியின் அனைத்துலகமயமாக்கம் சகல வகையான தேசியவாத வேலைத்திட்டங்களையும் காலாவதியாக்கியுள்ள முறைமையை விபரித்தார். கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சரிவினைத் தரிசித்த நாம் இன்று மேற்கில் சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களின் சிதறலைத் தரிசித்து வருவதாக றிப்பேர்ட் மேலும் குறிப்பிட்டார். கடந்த காலத்தில் சீர்திருத்தங்களதும், வர்க்க சமரசங்களதும் வாகனங்களாக விளங்கிய அமைப்புக்கள் இன்று முதலாளித்துவ அரசின் நேரடி ஆயுதங்களாக மாறி, கடந்த காலத் தேட்டங்களை — தொழில், சம்பளம், ஜனநாயக உரிமைகள்— அழிப்பதற்குப் பொறுப்பாகியுள்ளன எனவும் குறிப்பிட்டார். தனது பேச்சினை முடித்து வைக்கையில் றிப்பேர்ட் பின்வருமாறு குறிபபிட்டார்; ''இந்த தாக்குதல்களுக்குப் பதிலாகத் தொழிலாளி வர்க்கம் வேண்டுவது தொழிற்சங்கப் பாணியிலானதும் தொழிற்சங்க உபாயத்தின் அடிப்படையிலான ஒரு சீர்திருத்தம் அல்ல. அது தொழிற்சங்கங்களின் சீர்திருத்தவாத முன்நோக்கினைத் தாண்டிச் செல்லும் ஒரு அரசியல் வேலைத்திட்டத்தை வேண்டி நிற்கின்றது. இன்று அவசியப்படுவது அனைத்துலக ரீதியில் தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்த வல்லமை வாய்ந்த ஒரு புரட்சிகர சோசலிச வேலைத்திட்டம்'' என அவர் வலியுறுத்தினார்.

இம்மகாநாட்டில் இனவாதத்துக்கும், யுத்த ஆபத்துக்கும் எதிராக ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பிரேரணை பாசிசத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பது பற்றிப் பேசுகையில் கூறியதாவது: ''199ல் ஜேர்மனி முதலாளித்துவ ரீதியில் மீள இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பமான இனவாத கலகங்களும், இதுவரை 17 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தமையும் ஜேர்மனியின் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி அனைத்துலகத் தொழிலாளர்களுககும் பேராபத்தை தோற்றுவித்துள்ளது. ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டு கிட்டத்தட்ட 50 ஆண்டுகளின் பின்னர் பாசிசத்தினதும் யுத்தத்தினதும் புதிய அச்சுறுத்தல் தோன்றியுள்ளது. இந்நூற்றாண்டில் மூன்றாவது தடவையாக மனித இனத்தை பேரழிவினுள் மூழ்கடிக்க அச்சுறுத்திக் கொண்டுள்ளது. ஆதலால் இம்மாநாடு முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும் அழைப்பு விடுக்கின்றது; வரலாற்றில் இருந்து படிப்பினைகளைப் பெறுங்கள்! உடனே தொழிற்படுங்கள்! முதலாளித்துவ அமைப்பை தூக்கி வீச தொழிலாளி வர்க்கத்தினை சுயாதீனமான முறையில் அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே பாசிச பயங்கரங்களையும் இனவாத கலகங்களையும் நிறுத்த முடியும்''. இப்பிரேரணை இறுதியில் கூறுவது, மேலும் நாம் கோருவதாவது: தேசிய எல்லைகளைத் தாண்டி, கிழக்கு ஐரோப்பா, முன்னைய சோவியத் யூனியன், வட, தென் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்காவின் சகல தொழிலாளர்களுடன் சேர்ந்து தொழில், சம்பளம், அடிப்படை உரிமைகளைக் காக்கும் போராட்டத்தை முன்னெடுங்கள்! ஒரு சோசலிச வேலைத்திட்டத்தினை அமுல் செய்ய ஒரு தொழிலாளர் அரசாங்கத்தை நிர்மாணிக்கப் போராடுங்கள்! தொழிலாளி வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு திட்டமிட்ட முறையில் பொருளாதாரத்தை ஒழுங்கமைக்கும் சோசலிச உலக குடியரசின் ஒரு பாகமாக ஐக்கிய ஐரோப்பிய சோசலிச அரசுகளை அமைக்கப் போராடுங்கள்!

'' ஒரு புதிய சோசலிச உலக அமைப்புக்காக உலகத் தொழிலாளர்களை ஐக்கியப் படுத்த ஒரு புதிய அரசியல் தலைமையை - உலக சோசலிசப் புரட்சியின் கட்சியாக நான்காம் அகிலத்தையும் அதன் ஜேர்மன் கிளையாக பண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரையும் கட்டி எழுப்ப வேண்டும்'' என்றது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்னணி உறுப்பினர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியமை ஒரு முககிய அம்சமாக விளங்கியது. (அமெரிக்க) வேர்க்கஸ் லீக்கின் தேசிய செயலாளர் டேவிட் நோர்த், (இலங்கை) புரட்சிக் கம்யூனிஸ்ட கழக பொதுச் செயலாளர் விஜ டயஸ், (பிரித்தானியா) இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் டேவ் ஹயிலண்ட் ஆகியோர் தத்தம் நாட்டின் அரசியல் அபிவிருத்திகள் பற்றிக் குறிப்பிட்டதோடு, ஜேர்மனியின நிலைமையைப் பற்றியும் உலகத் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் பற்றியும் இடம் பெற்ற கலந்துரையாடலிலும் பங்கு கொண்டனர்.

ஈக்குவடோர் 'கொமிட்டி சோசலிஸ்ட்' இயக்கத்தின் அங்கத்தவராக விளங்கிய வினிசியோ பொவிதா அரசியல் படுகொலைக்குள்ளானதை ஆயும் ஒரு பூரண விசாரணைக்கான பிரச்சாரத்துக்கு ஆதரவு வழங்கும் பிரேரணை மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



விஜே டயஸ்

# இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?

1992 நவம்ப
புரட்சிக் கம்யூ
கொழும்பு பெ
போர் கூடத்
இலவசக் கல்வி
கும் ஆசிரியர்
பெற்றோர் ப
க. க. செயல
விஜே டயஸ் நி

[இறுதி பாகம்]

சுதந்திர வர்த்தக வலயத்தில் மாதத்திற்கு ரூபா. 1200/ சம்பளம் பெறும் இளைஞனின் அல்லது யுவதியின் பெற்றோர், சகோதர, சகோதரிகள் உட்பட முழுக் குடும்பமும் இதுவரை காலமும் அனுபவித்து வந்த உதவி மானியங்கள் — ஜனசவி கொடுப்பனவும் கூட — குடும்பத்தில் ஒரு பிள்ளைக்கு ஒரு சொற்ப சம்பளம் கிடைக்கும் தொழில் கிடைத்ததும் இரத்துச் செய்யப்படுகின்றது. ஆளும் வர்க்கத்தின் இந்த வேலைத் திட்டம் தற்சமயம் அமுல் செய்யப்படும் முறையைக் கண்டுகொள்ள முடியும்.

## தோட்டத் தொழிலாளர்கள்

அது மட்டுமன்று. இனவாதக் குண்டர்கள் அநேகமாகத் தமது பிற்போக்குப் பிரச்சாரங்களின் பேரில் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் சம்பளங்களை ஒன்றாகக் கூட்டிப் பூதாகாரப்படுத்திக் காட்டுவதுண்டு. இதனுள்ளும் முதலாளித்துவ முறையின் இந்த மிலேச்சப் போக்கு செயல்படுத்தப் படுகின்றது. தோட்டத் தொழிலாளர் குடும்பக் குழந்தைகளின் கல்வி, ஆரம்பம் தொட்டே உதாசீனம் செய்யப் பட்டதொன்றாகும். அவர்கள் பாடசாலை செல்லவேண்டிய வயதில் தோட்ட அடிமை உழைப்பு விநியோகத்தின் பேரில் அமர்த்துவது ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியின் — யூ.என்.பி. — சிறீலங்கா — கூட்டரசாங்கம் அனைத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு முறையாகும். இந்த வேலைத்திட்டத்துக்குச் சமாந்தரமாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஏனைய சகல தொழிலாளர் பிரிவினரதும் சம்பள மட்டத்திலும் பார்க்க மிகக்குறைந்த அளவில் வைத்திருப்பதிலும் தோட்ட நிர்வாகிகள் வெற்றி கண்டனர்.

## ஏழை விவசாயி மக்கள்

ஏழை விவசாய மக்களிடையேயும் அவர்களை தரித்திரத்தினுள் தள்ளுவதற்குச் சமாந்தரமான முறையில் இந்த முதலாளித்துவ முறையின் தொழிற்பாட்டினைக் கண்டு கொள்ள முடியும். மூலதனச் செலவுகள் — உரம், இரசாயனப் பொருட்களின் விலை, ட்ராக்டர் கட்டணம் ஆதியன வானத்தை எட்டும் நிலையில், இரண்டொரு ஏக்கரில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது உயிரைப் பிடித்துக் கொண்டது எப்படி? ஒரு நாளுக்கு 12, 14 மணித்தியாலங்கள் தமது உழைப்பினை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதன் மூலம் மட்டுமன்றி, தமது முழுக் குடும்பத்தினதும் உழைப்பினை கால வரையறையின்றி பயன்படுத்துவதன் மூலமேயாகும். கிராமப் புறங்களில் பாடசாலை செல்லவேண்டிய வயதினரான பிள்ளைகள் பாடசாலைகளை விட்டு விலகிச் செல்லும் வேகம் 1980 பதுகளில் வெகுவேகமாக அதிகரித்தமை இதைச் சுட்டிக்காட்டியது.

விவசாயம் மூலதனத்தின் ஆளுமைக்கு மேலும் மேலும் கீழ்ப்படும் நிலையில் பெருமளவிலான உழைப்புத் தீவிரப் படுத்தல் இல்லாமல் ஏழை விவசாயியினால் விவசாயத்தின் மூலம் உயிர் வாழ மார்க்கமே இல்லை. சிறிய விவசாய முறையின் பொருளாதாரத் தீங்குகள் இதன் மூலம் தோன்றுகின்றன. எனினும் முதலாளித்துவ முறையின் கீழ் விவசாய பண்ணையை கைவிட்டால் குழந்தை குட்டிகள் அனைத்தும் பட்டினியில் செத்து மடிவதைத் தவிர வேறு பதிலீடு ஏழை விவசாயிகளுக்கு இல்லை. குழந்தை குட்டிகளை வேலைக்கு அமர்த்துவதும் கூட அவருக்கு நீண்ட காலத்தில் மீட்சியாகி விடாது. அது முழுக் குடும்பத்தினதும் தரித்திரத்தை உக்கிரமாக்க மட்டுமே உதவுகின்றது. விவசாயத்தில் நஷ்டம் அடையும் அல்லது கடனில் மூழ்கும் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு இதைச் சுட்டிக் காட்டுகின்றது.

## சுயாதீன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் எழுச்சி காண்போம்

இலவசக் கல்வியின் அழிவு இந்தச் சகல காட்டுமிராண்டி நிலைமைகளையும் ஊர்ஜிதம் செய்யும் முதலாளித்துவ வேலைத்திட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளது.

முதலாளித்துவக் கட்சிகளில் இருந்தும் அவற்றின் சகல வேலைத் திட்டங்களிலிருந்தும் பூரணமாக விடுபட்ட ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கம் எழுச்சி காண்பதன் மூலம் முதலாளித்துவக் கட்சிகளுக்கு எதிராக கிராமப்புற ஏழை விவசாயிகளையும் இளைஞர்களையும் தன்னைச் சூழ அணிதிரட்டி, சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் தொழிலாள — விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டுப் போராடாமல் இந்த காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து விடுபட மார்க்கம் இல்லை. அது உலகம் பூராவும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் பொது எதிரியான உலக முதலாளித்துவத்தினைத் துடைத்துக் கட்டும் போராட்டமாதலால் அந்தப் போராட்டத்தினை அனைத்துலகவாத அடிப்படையில் பூகோளரீதியில் அணிதிரட்டும் அரசியல் அவசியம், இன்று என்றுமில்லாத முறையில் ஏற்பட்டுள்ளது.

## போராட்டத்தை தவிர்ப்போர்

தொழிலாளி வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் இப்பாதையில் இறங்குவதைத் தவிர்ப்போர் யார்? ஏகாதிபத்திய முதலாளித்துவ முறையையும் அதன் ஆட்சியையும் காப்பதில் அப்பட்டமாக ஈடுபட்டுள்ள துரோகத் தலைவர்களே. இலங்கையில் அவர்கள் சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ.தொ.கா. முதலான பெயர்களைக் கொண்டுள்ளனர். இ.தொ.கா, யூ.என்.பி. அரசாங்கத்தின் பங்காளியாகி உள்ள அதேசமயம், இங்கு முதலில் குறிப்பிட்ட மூன்று கட்சிகளும் யூ. என், பி. அரசாங்கத்துக்கு எதிரானவை போல் காட்டிக்கொண்டு பல்வேறு ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ இனவாதக் கட்சிகளுடன் சேர்ந்து யூ.என்.பி. அரசாங்கத்தின் காட்டுமிராண்டி வேலைத்திட்டத்தின் பாதுகாப்புச் சேவையில் சேர்ந்துள்ளனர். சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் இந்தப் பணியை நிறைவேற்றுவதிலேயே ஈடுபட்டுள்ளனர்.

முதலாளித்துவ சிறீலங்கா கூட்டரசாங்கத்தில் சேர்ந்து சிங்கள, தமிழ் தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களின் சகல பிரிவினருக்கும் எதிராகத் தாக்குதல் நடாத்திய இந்தத் துரோகத் தலைவர்கள், மக்களிடையே வெறுப்புக்குள்ளானதன் பின்னர், இன்று பல்வேறு பொய்க் கால்களுடன் நாட்டியம் ஆடுவதன் மூலம் ஏகாதிபத்தியத்துக்குதமது அந்தியகால அடிமைச் சேவையை நிறைவேற்றி வைக்க முயற்சிக்கின்றனர். அங்கு அவர்கள் வழக்கம் போல் தொழிலாளி வர்க்கத்தின் மேல் பழி சுமத்துவதன் மூலம் தமது பணியை ஆரம்பிக்கின்றன.

## சமசமாஜ, ஸ்டாலினிஸ்டுகள்

சமீபத்தில் நடைபெற்ற சமசமாஜக் கட்சி மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டதும், அதனுள்ளேயும் கூட நிறைவேற்றப்பட முடியாது போனதுமான மத்திய குழுவின் அரசியல் பிரேரணையைத் தெளிவு படுத்துகையில் சமசமாஜ உப-தலைவர் பற்றி வீரக்கோன் பின்வருமாறு கூறுகின்றார்: ''தொழிலாளி வர்க்கம் இன்னமும் அந்த யூ.என்.பி. எதிர்ப்புச் சக்திகளுக்குத் தலைமை தாங்க முன்வரவில்லை. வர்க்கத்தின் மேலான ஆத்ம நம்பிக்கை இன்னமும் ஏற்படாத நிலையிலேயே தொழிலாளி வர்க்கம் அங்ஙனம் முன்வரவில்லை. அந்த ஆத்ம நம்பிக்கையை கட்டி எழுப்பவே சமசமாஜக் கட்சி முதலில் பார்க்கிறது'' (1992 நவம்பர் 5ம் திகதிய 'சமசமாஜய' பத்திரிகை)

இங்ஙனம் தொழிலாளி வர்க்கத்தினைக் குறைகூறிய தன் பின்னர் வீரக்கோன் தமது கட்சி ஈடுபட்டுள்ள நடவடிக்கையின் தன்மையை விபரிக்கின்றார்:

''இடதுசாரிக் கட்சிகள் முதலில் ஐக்கியப்படுவதன் மூலமே அதைச் செய்ய முடியும். இதன் பொருட்டு இப் பிரேரணையில் நாம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருங்கிச் செயற்படுவதையும் இரண்டு கட்சிகளையும் ஒன்றுபடுத்தும் நோக்கில் செயற்படுவதையும் அங்கீகரிக்கின்றோம். நாம் இரண்டு கட்சிகளையும் ஒன்றெனஅங்கீகரிப்பின் தொழிலாள வர்க்கத்தினுள் கட்டாயம் பரந்த தைரியம் ஏற்படுவது நிச்சயம்''.

இத்தகைய ஒரு அறிக்கையைக் கேட்கும் எந்தவொரு கிராமவாசியும் முகத்தில் கைகொடுத்து, அம்மாடியோ என்ற கேள்வி எழுப்பி, பெருமூச்சுவிடவே செய்வான்.

இந்த அறிக்கையை, இலவசக்
காக்க அக்கறை கொள்ளும் ஆசிரிய
றோர் சம்பந்தமாகப் பயன்படுத்து
எழுப்பும் கிராமவாசி, வீரக்கோன் அ
டிலும் வாழ்க்கை அனுபவங் செ
தோன்றுகின்றார். நாம் அங்ஙனம்
வசக் கல்வி உரிமையை வெற்றி கெ
சமசமாஜக் கட்சியும் ட்ரொட்ஸ்கிச
னிஸ்ட் கட்சியும் பிரித்தானிய ஏகாதி
கம்' ஆட்சியை எதிர்த்துப் போரா
அந்தச் சகல போராட்டங்களிலும்
ஈடுபட்ட ஸ்டாலினிஸ்ட்கப் யூனிஸ்ட்க
திகளின் அரவணைப்பில் தவழ்ந்த ஒ
தே. பிரித்தானிய ஏகாதிபத்தியவா
'ஜாதிக சங்கம்' ஆட்சிக்கு எதிராக
தியச் சார்பு ஸ்டாலி க் கை
நாட்டு தொழிலாள — ஒடுக்கப்படும் ம
மூலமே இலவசக் கல்வி உரிமை வெற்

இத்தகைய ஒரு அசிங்கமான
ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியுடன்
கட்சி அமைக்கும் இலக்குக்குச் செ
உலக ஏகாதிபத்திய நெருக்கடியின்
யின் தலைமையில் உள்ள துரோகிக
த்த துரோகங்களையும் தாண்டி எ
ஏகாதிபத்திய வாதிகளின் பிடியுள்
கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்

பற்றி வீரக்கோனிடமும், சமசம
வர்களிடமும் ஒரு நேரடிக் கேள்வி
முடியும். சமசமாஜக் கட்சி, இலவச
நாட்டுத் தொழிலாள — ஒடுக்கப்படும்
மைகளுக்காகப் போராடி, பிரித்த
வாத ஆட்சியைத் துடைத்துக் க
ஈடுபட்டிருந்த கட்டத்தில் கம்யூனி
னிஸ்டுகள் வெகுஜன ளுக்கிடை
காணாத சக்திகளைப் பற்றி வத
அதைப்பற்றி ஆளும் வர்க்கத்துக்கு
வர்கள் இல்லையா? இன்று இலவசக்
காக்க முன்வரும் ஆசிரியர் — மாணவ
நீங்கள் எழுப்பும் குற்றச்சாட்டும் அ
எதிரிடை அர்த்தம் காட்டுவதில்
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன்
ஒன்றுபடுத்த இடம் பெறும் முயற்சி,
ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள்
நிலைமையில் பழம்பெரும் கருங்காலி
களையும் பேணிக் காக்கும் ஒரு தே
அது தொழிலாளி — ஒடுக்கப்படும்
அவர்கள் அனுபவித்துக் கொண்டுள்ள
கும் எதிராக ஏகாதிபத்தியத்துடன்
அப்பட்டமான அலுகோசு ஒன்றினை

## நவசமசமாஜக்

நவசமசமாஜக் கட்சி, பப்லோவ
ணஸ்ட் மண்டேலின் சந்தேகத்துக்கி
யச் சார்பு அமைப்பினது அங்கத்துவ
கொள்ளச் சென்றமையானது வெகுஜ
தும் — இதற்கு எதுவிதத்திலும் இரண்
அழிவினைத் தேடிக் கொள்ளும் ஒரு
ஐ. ஏ. இயக்கத்துடன் சதிகாரத் தொ
டவராக ஏர்ணஸ்ட் மண்டேலின் அ
குழுவினால் நடாத்தப்பட்ட விசாரண
ஊர்ஜிதம் செய்யப்பட்ட பாலா தம்
புகளை மண்டேல் இன்னமும் கை
அம்பலமாகியுள்ளதன்படி ஸ்டாலினி
ஜேர்மனியின் 'ஸ்டாஸி' உளவுச் சே
குமுறை இயந்திரங்களுடனும் நெரு
வராக நிரூபிக்கப்பட்டுள்ள கைசியுட
காம் அகிலத்தின் அனைத்துலகக் கு
பட வேண்டிய ஒரு இயக்கமென ம
மாணம் செய்து கொண்டுள்ள ஒரு
சமசமாஜ தலைவர்கள் மண்டேலின்
காக ஐரோப்பிய விஜயத்தை ஆரம்
ஆர், ஜயவர்த்தனாவின் முன்னிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

992 நவம்பர் 8ம் திகதி
ட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
ாழும்பு பொது நூலக கேட்
ார் கூடத்தில் நடத்திய
வசக் கல்வி உரிமை காக்
ஆசிரியர்—மாணவர் —
ற்றோர் மாநாட்டில் பு.
க. செயலாளர் தோழர்.
ஜ டயஸ் நிகழ்த்தியபேச்சு

இலவசக் கல்வி உரிமையைக்
ரும் ஆசிரியர், மாணவர், பெற்
யன்படுத்தும் இடத்து கேள்வி
ங்கோன் அத்துவக்காத்தைக் காட்
பவங் கொண்ட ஒருவராகத்
அங்ஙனம் கூறக் காரணம், இல
வெற்றி கொள்ளும் பொருட்டு
ிராட்ஸ்கிச போல்ஷிவிக்—லெனி
ணிய ஏகாதிபத்திய, 'ஜாதிக சங்
ப் போராடும் காலகட்டத்தில்
ங்களிலும் கருங்காலி வேலையில்
ம்யூனிஸ்ட்கட்சி ஏகாதிபத்தியவா
வழ்ந்த ஒரு கட்சியாக விளங்கிய
திபத்தியவாதி. முதலாளித்துவ
எதிராக மட்டுமன்றி ஏகாதிபத்
க் கை[illegible]லிகளுக்கு எதிராக இந்
க்கப்படும் மக்கள் போராடியதன்
ிமை வெற்றி கொள்ளப்பட்டது.

சிங்கமான வரலாறு படைத்த
கட்சியுடன் சேர்ந்து, தனியொரு
தக்குச் சென்றமை, இன்றைய
க்கடியின் கீழ் சமசமாஜக் கட்சி
துரோகிகள் 1970—75ல் இழை
ாண்டி எந்தளவுக்கு வலதுபுறம்-
பிடியுள் இன்று தவழ்கின்றார்
ாட்டுகின்றது.

ம், சமசமாஜக் கட்சித் தலை
க் கேள்வியை எழுப்பி வைக்க
ி, இலவசக் கல்வி உட்பட இந்
க்கப்படும் வெகுஜனங்களின் உரி
., பிரித்தானிய ஏகாதிபத்திய
ந்துக் காட்டும் போராட்டத்தில்
கம்யூ[illegible]ட் கட்சியின் ஸ்டாலி
நக்கி[illegible]ய 'பேயாடும்' கண்
பற்றி வதந்தி பரப்பியதோடு
கத்துக்கு உளவு பார்த்து வந்த
று இலவசக் கல்வி உரிமையைக்
—மாணவர்—பெற்றோர்களுக்கு
ாட்டும் அதுவல்லவா? வரலாறு
ட்டுவதில் பெரும் திறமைசாலி.
சியுடன் சமசமாஜக் கட்சியை
ம் முயற்சி, உலகளாவிய ரீதியில்
வங்கள் கவிழ்ந்து கொட்டும்
கருங்காலிகளையும், அலுகோசு
ம் ஒரு தேசிய முயற்சியாகும்.
க்கப்படும் வெகுஜனங்களுக்கும்
காண்டுள்ள சகல உரிமைகளுக்
யத்துடன் செய்து கொள்ளும்
ஒன்றிணைவாகும்.

## மாஜக் கட்சி

பப்லோவாத பேராசிரியர் ஏர்
தகத்துக்கிடமான ஏகாதிபத்தி
அங்கத்துவத்தினைப் பெற்றுக்
து வெகுஜனங்களுக்கு எதிரான
லும் இரண்டாம் தரமற்றதுமான
ள்ளும் ஒரு முயற்சியாகும். சி.
காரத் தொடர்புகளில் ஈடுபட்
டேலின் அமைப்பின் ஆணைக்
விசாரணை அறிக்கை மூலம்
பாலா தம்புவுடனான தொடர்
மும் கைவிடவில்லை, இன்று
ஸ்டாலினிச ஜீ. பீ. யூ. கிழக்கு
ளவுச் சேவைகளுடனும், ஒடுக்
வும் நெருங்கித் தொழிற்பட்ட
கைசியுடன் சேர்ந்து, நான்
துலகக் குழு அழித்தொழிக்கப்
கமென மண்டேல் சத்தியப்பிர
ள்ள ஒரு கட்டத்திலேயே நவ
ண்டேலின் போசன விருந்திற்
தை ஆரம்பித்துள்ளனர். ஜே.
முன்னிலையில் தலைசாய்த்து,

அவரின் இனவாத யுத்தத்துக்கு ஆதரவளிக்கும் பொருட்டு வட்டமேசை பேச்சுவார்த்தைகளில் வயிறளர்ந்த வாசுதேவ நாணயக்காரவுக்கும் விக்கிரமபாகு கருணாரத்னவுக்கும் மண்டேல் வழங்கிய உணவின் நாற்றம் தன்னும் தெரியாதது புதுமையல்ல. எனினும் 1964 கூட்டரசாங்கத்துக்குள் சமசமாஜக் கட்சியை (நாணயக்கார, கருணாரத்ன உடபட) கொண்டு செல்லத் தொழிற்பட்ட ஏர்ணஸ்ட் மண்டேல், இந்நாட்டுத் தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களைத் துச்சமாக மதிப்பது நிச்சயம். மண்டேலும் இதை அறிவார். அவரின் சார்பில் நவசமசமாஜக் கட்சி தயார் செய்த இலங்கை விஜயம் எனப்பட்டதில் 'பாதுகாப்புக் காரணங்களால் கலந்து கொள்ள முடியாது' எனக் கூறி மண்டேல் தலைதப்பியதற்கு காரணம் அதுதான். ஏகாதிபத்தியத்தின் அப்பட்டமான ஏஜன்டான மண்டேலுக்கு பாதுகாப்புப் பற்றிய அச்சுறுத்தல் ஏற்படக் கூடியது ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச ஆட்சியாளர்களிடம் இருந்தல்ல என்பதை மண்டேலும். நவசமசமாஜ தலைவர்களும அறிவர்.

இலங்கையின் சிங்கள—தமிழ் தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்த வெகுஜனங்களிற்கு தீங்கிளைத்த அரசியலுக்குத் தோள் கொடுப்பவராக அவா கருதிக் கொண்டுள்ள இந்நாட்டு வெகுஜனங்களாலேயே அவரை அடித்துத் துரத்த முடியும். வேறு வார்த்தையில் சொன்னால் மண்டேலின முன்நாக்கின கீழ் வழிநடாத்தப்பட்ட சமசமாஜ கட்சி (நாணயக்கார, கருணாரதன உட்பட) சிறீலங்கா கூட்டரசாங்கத்தில் சேர்ந்து, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மாணவன் வீரசூரியாவை படுகொலை செய்ததையும், இலவசக் கல்வி உரிமையைக் காக்கும் போராட்டத்துக்குக் குழிபறித்ததையும் அறிந்து வைததுள்ள தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களிடம் அவரின் நரகலோக அரசியல் போதினைகள் செலலாது என்பதை நவசமசமாஜ பிற்போக்காளர்கள் ஊடாக எப்படியும் மண்டேல் புரிந்து கொண்டிருக்க வேண்டும் எனபதை அது காட்டுகிறது. 1964ன மாபெரும் காட்டிக் கொடுப்புககு எதிராக இந்நாட்டின் தொழிலாளி வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும அணிதிரட்டும் பொருட்டு பெரிதும் கஷ்டமான நிலைமைகளின கீழும் போராடிய அனைத்துலகக் குழுவின தலைமையிலான நான்காம் அகிலம், அதன் அனைத்துலகத் தலைவர்களை இந்நாட்டிற்கு அழைத்து நாடுபூராவும வெகுஜன ஈர்ப்பினையும், ஆதரவும் பங்களிப்பும கூடிய அரசியல் பிரச்சாரங்களில் ஈடுபடும் வாய்ப்பினையும் (அமெரிக்க வேர்க்கஸ் லீக்கின ஜனாதிபதி வேட்பாளர் ஹெலன் ஹெல்யாட் சுற்றுலா போன்ற) இந்நிலையிலேயே ஏற்படுத்தியுள்ளது. தொழிலாளி—ஒடுக்கபபடும் மக்களின் தனியல்பான ஈர்ப்பு ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சிக்கும எதிரானது எனபதும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஏகாதிபததிய சார்பு ஆடசியுடன் சமரசம் செய்வோருககு எதிராகத் திட்டவட்டமான முன்னோக்கினையும் தலைமையினையும் சோசலிசப புரட்சியின் உலகக் கட்சியும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மட்டுமே வழங்குகின்றது என்பதும் வெகுஜனங்களுக்கிடையே துரிதமாக ஊர்ஜிதமாகி வருவது இந்த அரசியலின் அர்த்தமாகும்.

## இலங்கை ஆசிரியர் சங்கத் தலைமை

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் எச். என். பெர்னாந்து தலைமையும் அவரின் கையாட்கள் உட்பட சகல தொழிற்சங்க அதிகாரிகளும் தொழிலாளி வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் தாக்குதலுக்குள்ளாகும் போது வாய்மூடி மௌனிகளாக உள்ளனர், அத்தோடு முதலாளித்துவ ஆட்சிக்கு அவசியமான விதத்தில் தொழிற்சங்கங்களையும் உடைத்துக் கலைக்கச் செயற்பட்டு வருவது இந்நிலையிலேயே, தொழிலாளர்களின் உரிமைகள் சிதறடிக்கப்படும் போது அதற்குத் தோள் கொடுத்துக் கொண்டுள்ள தொழிற்சங்கம் அல்லது வேறொரு அமைப்பின் சார்பில் தியாகம் செய்யத் தொழிலாளர்கள் முன்வருவார்களா? இல்லை. எனினும் தொழிலாளர் அமைப்புக்களின் பேர்ப்பலகைகளைக் கொண்ட இத்தலைவர்கள், தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் போது தோள் கொடுத்து—வாய்மூடி மௌனியாக இருப்பது பிற்போக்கு ஆளும் வர்க்கத்துக்கு முக்கியமானது. நிதி அமைச்சரும்—பிரதமருமான டீ. பீ. விஜேதுங்க வரவு—செலவுத்திட்ட உரையில் கூறியது போல் அரசாங்கத்தின் தாக்குதல்களை மக்கள் கோபமின்றி சகித்துக் கொள்வார்கள் என்பதை உலகுக்குக் கூறத் தன்னிலும் இந்தத் துரோகிகளின் முதலாளித்துவச் சார்பு போக்கு, பிரேமதாச ஆட்சிக்கு அவசியம். அதை அவர்கள் நன்கு பயன்படுத்துகின்றார்கள்.

## ஆளும் வர்க்கத்திடமிருந்து நானாவித சலுகைகள்

யூ. என், பி. ஆட்சியின் கீழ் சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்களைப் போலவே தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் இடர்ப்பாடுகளையன்றி — வாய்ப்பான நிலைமையையே அடைந்துள்ளன, அதிகாரத்துவத்துக்கு அவசியமான விதத்திலும் அவர்களுக்கு [illegible]டுள்ள முறையிலும் [illegible]

துரோக வேலைத்திட்டத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழும் தொழிலாளியை அல்லது ஒடுக்கப்படும் போராளியை கைது செய்து சிறையில் தள்ளவோ அல்லது கொலை செய்யவோ அதிகாரத்துவத்தின் சார்பில் அரசு முன்வருவதற்குக் காரணம் அதுவே. இதற்கிடையே பாராளுமன்ற, பிராதேசிய சபைகள் முறையின கீழ் மாதாந்த அலவன்சுகள், ஒய்வூதியம், பஜரோ வாகனங்கள், அரச பாதுகாப்பு போன்ற நானாவித சலுகைகளை இந்தத் துரோகக் கட்சிகளதும் அமைப்புக்களதும் தலைவர்கள் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்கின்றார்கள். ஏனைய சலுகைகளுககு மேலதிகமாக மாதாந்தம் ரூபா, ?5000/-க்கும் மேலான அரசாங்கப் பணக்கொடுப்பனவுகளைப் பெறும் வாசுதேவ நாணயக்கார போன்றோர், பிரேமதாச ஆட்சியின் கீழ் தமது வாழ்நாளின் நல்ல சுகபோகமான வாழ்க்கை காலம் கழிந்து கொண்டுள்ளது எனக் கூறுவது கூட்டிப் பெருக்கிக் கூறுவதாகுமா? இவர்களுக்கு இச்சகல சலுகைகளையும் ஏகாதிபத்தியச் சார்பு ஆளும வர்க்கம் வழங்கியுள்ளதற்குக் காரணம், தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களுக்குத் தொடுக்கப்படும் மரண அடியின் முன்னால் வாய்மூடி மௌனியாக இருப்பதற்கு அல்லது அந்த வெகுஜன இயக்கத்தை இறைவழிபாடு போன்ற மலட்டு நடவடிக்கைகளில் இறக்குவதற்கான பணிகளுக்குப் பரிகாரமாகவாகும்,

பாடசாலை அபிவிருத்திச் சபைகளை நிறுவி, பெற்றோர்களிடமிருந்து பணம் கொள்ளையடிக்கும் முறையை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் ஏழைக் குழந்தைகளின் இலவசக் கல்வி உரிமையைப் பறிக்க யூ. என். பி. அரசாங்கம் செயற்பட்டு வரும் நிலையில் சமசமாஜக் கட்சி கூறுபவற்றுக்கு மீண்டும் ஒரு தடவை செவிமடுத்துப் பாருங்கள்.

சமசமாஜக் கட்சி மூன்று அம்ச வேலைத்திட்டம் ஒன்றை முனவைக்கின்றது:

முதலாவது, ''நிதி வழங்குவதைப் பகிஷ்கரிப்பதன் மூலம் பாடசாலை அபிவிருத்திச் சபையைத் தோற்கடிப்போம்'' என்கின்றது. இதன் மூலம் சமசமாஜ தலைவர்கள் பெற்றோர்களுக்கு கூறுவது என்ன? பாடசாலை அபிவிருத்திச் சபைக்குச் செல்லுங்கள்; அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுங்கள்; நிதி வழங்குவதை மட்டும் பகிஷ்கரியுங்கள்! என்பதாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சபைகளில் கலந்து கொள்ளும் பெற்றோர் நிதி வழங்குவதைப் பகிஷ்கரித்தால், அதைத் தவிர்க்கும் பொருட்டு வாயினால் மட்டுமன்றி கைகாலாலும் தாக்கும் திட்டங்களை அதிகாரிகளைப் போலவே சில தலைமை ஆசிரியர்களும் தயார் செய்து கொள்வார்கள் என்பது எவருக்கும் இரகசியம் அல்ல. இன்றும் கூட நிதி அறவிடுவதற்கு எதிராகப் போராடி வரும மாணவ, மாணவிகளுக்கு 'உங்களுக்குச் செய்வது எம்பிலிபிட்டியவில் செய்ததுதான்' என மிரட்டுவதற்கு யூ. என். பி. ஜூன்டா தலைமை ஆசிரியர்கள் முன்வந்திருப்பது இதைத் தெளிவு படுத்துகின்றது.

இவை எவையும் சமசமாஜ—ஸ்டாலினிச—நவசமசமாஜ—மற்றும் அதிகாரத்துவங்களுக்கு சம்பந்தமற்றவை, அவர்கள் உலக வங்கி கட்டளையின் கீழ் பிரேமதாச ஆட்சி நடைமுறைப் படுத்தும் இலவசக் கல்வி அழிப்பு வேலைகளை வெற்றிகரமாக நடாத்தி முடிக்கச் சார்பாக நின்று வருகின்றனர், எனவேதான் இந்தப் பாடசாலை அபிவிருத்திச் சபையைப் பகிஷ்கரிக்கும் சோஷத்தைத் தன்னும் எழுப்பாது இருக்கிறார்கள். ''நிதி கொடுக்காமலேனும் பாடசாலை அபிவிருத்திச் சபைகளைக் காப்போம்'' என்ற சமசமாஜ யோசனையானது அந்தச் சபை எனப்படுவதால் அமுல் செய்யப்படும் ஏனைய சகல வெட்டு, அழிவு வேலைகளுக்கு ஆதரவு காட்டுவது அன்றி வேறொன்றும் அல்ல.

## பரிணாமம்

''இலவசக் கல்விலயப் பெற்றுக்கொள்ள முன்நின்று போராடிய லங்கா சமசமாஜக் கட்சி, பாட்டாளி வர்க்கத்திடமிருந்து இலவசக் கல்வியைப் பிடுங்கிக் கொள்ளும் போராட்டத்தில் மௌனம் சாதிக்க முடியாது'' என்ற பம்மாத்துடன் 'சமசமாஜ' பத்திரிகை மேற்சொன்ன கோழைத்தனமான யோசனையை முன்வைக்கையில் அது எவ்வளவு தூரம் எதிரிடையானது? அன்று சமசமாஜக் கட்சி குறைபாடுகளுடன் என்றாலும் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியை ஒழித்துக்கட்டும் போராட்டத்தின் ஒருபாகமாக இலவசக் கலவி உரிமையை வென்றெடுக்கப் போராடியது. இன்று அந்த உரிமையைக் காக்க அக்கட்சி ஏகாதிபத்தியச் சார்பு யூ. என் பி. அரசாங்கத்துடன் சமரசத்துக்கு செல்லும் முறையில் யோசனையை முனவைத்துள்ளது. அன்றைககும் இன்றைக்கும் இடையே சமசமாஜக் கட்சியில் ஏற்பட்டுள்ள பரிணாமத்தை சகல போராளிகளும் புரிந்து கொள்வது — அக்காட்டிக் கொடுப்புக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்துள்ள புரட்சிக் கட்சியின் கீழ் அணிதிரண்டு, தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் பொறுப்புககுத் தோள் கொடுப்பதற்கு அவசியம்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம், மூன்றாம் யோசனைகளில் இடம்பெறும் 'அணிதிரண்டு முகம் கொடுப்போம்', 'எதிர்த்து ஒன்று கூடுவோம்' என்ற பந்திகள் இதனை மேலும் தெளிவுபடுத்துகின்றன. என்ன அணிதிரள்வு? எவறோ அல்லது ஒன்று கூடுவது எதற்கு? எவறோ அம்பலப்படுத்தாமல் இதற்குள் பதுங்கிக் கொண்டு "முடிந்தால் தேடிப்பிடி" என வெகுஜனங்களுக்கு ஆணையிடும் ஒரு தலைமை அங்கு தோன்றுகின்றது,

அக்டோபர் 8ம் திகதி கட்சி அறிக்கையின் மூலம் இந்தப் பிற்போக்கும், மோசடியும் நிறைந்த 3 பிரேரணைகளை முன்வைத்த சமசமாஜக் கட்சி, நவம்பர் 5ம் திகதி அளவில் அதையும் சுருட்டி மடக்கிக் கொள்கின்றது.

நவம்பர் 5ம் திகதிய 'சமசமாஜ' பத்திரிகை, மேல் மாகாண சபையில் சமசமாஜ தலைவர் பேனாட் சொய்சா சமர்ப்பித்த பிரேரணையுடன் தலைநீட்டுகின்றது. அந்த பிரேரணை கூறுவதாவது: " இந்தப் பாடசாலைச் சபைகள் சம்பந்தமாக மக்களிடையே ஏற்பட்டுள்ள சந்தேகத்துக்கிடமான நிலைமையினால் உத்தேச பாடசாலைச் சபைகளை நிறுவ வேண்டாம் என இச்சபை அரசாங்கத்தை வேண்டுகின்றது" என்பதாகும்,

யானை இல்லாவிட்டால் மாடு என்ற பாணியில் இறை வழிபாடுகளுக்கு மேலாக அரசாங்க வழிபாடுகளும் சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்தப் பிரார்த்தனையைப் பாவித்து சமசமாஜ–ஸ்டாலினிச—நவசமசமாஜ தலைவர்களும் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த 15 ஆண்டுகளாக ஒரேயடியாகத் தொடர்ந்து யூ. என். பி. ஆட்சியைப் பேணிக் காத்துள்ளனர்.

தமது கட்சிகளின் தலைவர்கள் அரசாங்க அமைச்சர் கதிரைகளில் இருக்கும் போது கூட சில தொழிற்சங்கங்கள் அந்த அரசாங்கங்களின் வேலைத் திட்டங்களுக்கு எதிராக வேலைநிறுத்தங்களில் குதித்த தருணங்களையும் முன்னர் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் சமசமாஜக் கட்சித் தொழிற்சங்கமாக இருந்த காலத்தில் கலாநிதி என்.எம். பெரேராவின் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தது. 1976–77 பொது வேலை நிறுத்தத்தில் ஸ்டாலினிச கெனமனும், துடாவையும் அமைச்சர் பதவியை வகித்த வேளையில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அநேக தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டன. கல்விச் சேவையைச் சேர்ந்த முன்னணி தொழிற்சங்கமான இலங்கை ஆசிரியர் சங்கம் அதன் தலைமை சார்ந்திருந்த ஜே.வீ.பி.யின் கருங்காலி வேலைத் திட்டத்திற்கு எதிராக 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டது,

ஆனால் இன்று? எந்தவொரு தொழிற்சங்க அதிகாரத்துவமும் இன்று யூ என். பி. வேலைத்திட்டத்துக்கு எதிராகத் தொழிலாளர்களை வழிநடத்த முன்வந்தது இல்லை. ஒரு புறத்தில் தொழிற்சங்கங்கள் கலைக்கப்படுகின்றன. மறுபுறத்தில் தொழிற் சங்கங்களின் பெயரைப் பாவித்து, இந்த அதிகாரத்துவங்கள் தொழிலாளி வர்க்கத்தின் சகல வர்க்க நடவடிக்கைகளுக்கும் விலங்கு மாட்டுகின்றன.

## தேயும் ஏகாதிபத்திய யுகத்தின் தொழிற்சங்க நடவடிக்கைகள்

'தேயும் ஏகாதிபத்திய யுகத்தின் தொழிற்சங்க நடவடிக்கைகள்' என்ற பத்திரத்தில் லியொன் ட்ரொட்ஸ்கி தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் இன்றைய தொழிற்பாட்டை பின்வருமாறு தெளிவுபடுத்தினார்.

"தொழிற்சங்க இயக்கத்தின் அதிகாரத்துவ தட்டினர் நினைப்பது போல் அவர்களின் முக்கிய பணி, முதலாளித்துவப் பங்கீட்டில் இருந்து அரசினை மீட்பதும், அது முதலாளித்துவ ட்ரஸ்டுகள் மேல் சார்ந்திருப்பதைப் பலவீனப்படுத்துவதும், அதைத் தம்பக்கம் இழுத்துக் கொள்வதுமேயாகும். இப்பணி, ஏகாதிபத்திய முதலாளித்துவம் சிருஷ்டிக்கும் மாபெரும் மூலதன இலாபத்தில் இருந்து சிறு பங்கினைப் பெற்றுக் கொள்ளத் துடிக்கும் உயர் தரத்தைச் சேர்ந்த தொழிலாளர்களதும் தொழிற் சங்க அதிகாரத்துவத் தட்டினரதும் சமூக நிலைமையுடன் முற்றிலும் ஒத்துப் போகின்றது. தொழிற்சங்க அதிகாரத்துவத் தட்டினர் சமாதான சகாப்தத்திலும் சிறப்பாக யுத்த காலத்திலும் தாம் எவ்வளவுக்கு நம்பிக்கைக்குரிய நடவடிக்கைக்குரிய அத்தியாவசியமான பிரிவினர் என்பதை 'ஜனநாயக' அரசுக்குச் சொல்லிலும் அவ்வாறே செயலிலும் காட்டுவதற்கு முடிந்த சகல முயற்சிகளும் எடுக்கின்றனர். தொழிற் சங்கங்களை அரசின் ஆயுதமாக மாற்றி, பாசிசம் புதியது ஒன்றையும் சிருஷ்டிப்பதில்லை. பாசிசம் உண்மையில் ஏகாதிபத்தியத்தின் உண்மையான போக்குக்களின் சிந்தனையை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது."

இதைத் தொடர்ந்து ட்ரொட்ஸ்கி அரைக்-காலனித்துவ நாடுகளில் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் பணி என்ன என்பதைத் தெளிவு படுத்தினார். அடுத்த பந்தியில் அவர் குறிப்பிட்டது இதுதான்:

"முதலாளித்துவ ஏகாதிபத்தியம், காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளில் உயர் தரத்தினைச் சேர்ந்த தொழிலாளர் பிரிவினரையும் தொழிற்சங்க அதிகாரத்துவத் தட்டினரையும் சிருஷ்டிப்பதைப் போலவே தொழிற்சங்க அதிகாரத்துவங்களுக்குக் காலனித்துவ, அரைக்காலனித்துவ அரசாங்கங்களின் உதவி–பாதுகாப்பாளர்களாக அல்லது சிலவேளை பிணக்குத் தீர்ப்பாளர்களாக அவசியப்படுகின்றது. இதன் மூலம் காலனித்துவ நாடுகளிலும் பொதுவில் பின்தங்கிய நாடுகளிலும் போனபாட்டிச அல்லது அரைப் போனபாட்டிச இலட்சணம் கொண்ட அரசாங்கங்களின் மிகவும் முக்கியமான சமூக அடிப்படை உண்டுபண்ணப்படுகின்றது. அவ்வாறே சீர்திருத்தவாத அரசியலிலிருந்து பராமரிப்புக்கு அவசியமான அடிப்படை சிருஷ்டிக்கப்படுகின்றது." (லியொன் ட்ரொட்ஸ்கி.)

## போராட்டத்தின் கருவி அல்ல

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர அனைத்துலகவாதத்தினை நிராகரித்த தொழிற்சங்க அதிகாரத்துவங்களது செயற்பாடு, இந்த வரலாற்று விதிக்கு இணங்கவே நிர்ணயம் செய்யப்படுகின்றது. அத்தகைய அதிகாரத்துவங்களைத் தலைமையில் கொண்ட தொழிற் சங்கங்கள் இனியும் தொழிலாளி வர்க்க அவசியங்களுக்கான போராட்டத்தின் கருவி ஆகாது. அவை தொழிலாளி வர்க்கத்தின் உள்ளே முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினதும் அதன் அரசினதும் அவசியங்களைக் கொண்டோடும் சாக்கடைகளாகச் செயற்படுகின்றன. முதலாளித்துவ அரசு, இந்தச் சகல சாக்கடைகளின் ஊடாகவும் தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு பிரிவினருள்ளும் தட்டினருள்ளும் நாறிப்போன உடலின் சிதழ்களை ஓடவைக்கின்றது.

தொழிலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு பிரிவினரதும் வரையறுக்கப்பட்ட கோரிக்கைகளின் பேரில் முதலாளித்துவத்துடன் பேரம் பேசும் இயந்திரமாக நிறுவப்பட்ட தொழிற்சங்கங்கள் இத்தகைய தலைவிதியை எதிர்நோக்கக் காரணம், அவை குறுகிய தனிநபராக தேசியவாதத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளதேயாகும்.

"தொழிலாளி வர்க்க இயந்திரத்தின் தன்னியல்பான அபிவிருத்தியினால் அது முதலாளித்துவ சிந்தனைக்குக் கீழ்ப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது" என லெனின் 'என்ன செய்யவேண்டும்?' என்ற நூலில் எச்சரிக்கை செய்ததற்கும் "முதலாளித்துவ வர்க்கத்தின் நெருக்குவாரத்துக்குள் அகப்பட்டுப் போக தொழிலாளி வர்க்கம் எடுக்கும் இந்தத் தன்னியல்பானதும் தொழிற்சங்கவாத ரீதியானதுமான முயற்சியை நிராகரிப்பதும், அதை சமூக ஜனநாயகத்தின் கீழ்க் கொணர்வதும், எமது பணியாகும்" என அவர் சிபார்சு செய்ததற்கும் காரணம் இதுவே.

## நடவடிக்கைக் குழு

தொழிலாளி வர்க்கம் அனைத்துலகவாத—புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் காலூன்றி, ஒடுக்கப்படும் மக்களின் தலைவன் என்ற முறையில் தனது வரலாற்றுப் புரட்சிகரப் பணியை அப்போதுதான் நிறைவேற்ற முடியும். அது தொழிற்சங்கங்களின தலைமையில் உள்ள துரோக அதிகாரத்துவங்களினை துடைத்துக் கட்டுவது பற்றிய பிரச்சினை மட்டுமன்று. ஆதலால் அது தொழிற் சங்கங்களின் அமைப்புகளுள் கட்டுண்டு கிடப்பதன் மூலம் அடையக் கூடிய பரிணாமமும் அல்ல. புதிய புரட்சிகர உள்ளடக்கத்துக்கு இணங்க அமைப்பு வடிவத்தையும் அதன் பேரில் தயார் செய்து கொள்ள வேண்டும். ஆனால் அவற்றுடன் மட்டும் நின்று கொள்ளாமல் ஏனைய தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களின் ஆதரவினைப் பெற்ற நடவடிக்கைக் குழுக்களை சகல வேலைத்தலங்களிலும், தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் வதிவிடங்களிலும் கட்டி எழுப்ப வேண்டும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கூறுகின்றது.

தொழிற் சங்கங்களுள் பதுங்கிக் கொண்டுள்ள அதிகாரத்துவங்களை வெளியேற்றி, புரட்சிகரத் தலைமையின் கீழ் தொழிற் சங்கங்களை மீளக் கட்டி எழுப்புவதானது தொழிற்சங்கங்களுள் அணிதிரட்டப்படாத சகல தொழிலாளர்களதும், முதலாளித்துவ அமைப்பினை இனியும் சகித்துக் கொள்ள முடியாமல் கிளர்ச்சியில் இறங்கியுள்ள ஒடுக்கப்படும் மக்களதும், இளைஞர்களதும் போர்க் குணத்தினையும் புரட்சிகரக் கோட்பாட்டின் மூலம் ஆயுதபாணியாக்கி தொழிற்சங்கங்களைச் சூழ அணிதிரட்டுவதாகும். இலவசக் கல்வி குழிதோண்டிப் புதைக்கப்படும் நிலையில் தமது தொழிற்சங்க உறுப்பினர்களான ஆசிரியர்கள் [illegible] தொழில்களை இழந்தும்,........

(9ம் பக்கம் பார்க்க)

பொகவந்தலாவ:

## வேலைச் சுமையை எதிர்த்து தோட்டங்களில் வேலை நிறுத்தம்

தோட்டங்களை தனியார் கம்பனிகள் கையேற்ற பிற்பாடு வேலைப்பழுவை அதிகரிப்பதற்காக தோட்ட நிர்வாகம் விதிக்கும் கடும் நிபந்தனைகளுக்கு எதிராக பரந்த ரீதியில் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

இவ்வாறு தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளுக்கு எதிராக பொகவந்தலாவ, கொட்டியாகலை தோட்டத்தின் ஏழு டிவிசனையும் சேர்ந்த தொழிலாளர்கள் நவம்பர் 14ம் திகதியிலிருந்து வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளார்கள். இ. தொ. கா., என்.யு.டபிள்யு., சி.பி. டபிள்யு. யு., எல். ஜெ இ. டபிள்யு. யு., ஆகிய தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 1800 தொழிலாளர்கள் இவ் வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றியுள்ளார்கள். இத் தோட்டம் மெற்றோ போலிடன் கம்பனி நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

நவம்பர் 13ம் திகதி 63 ஆண் தொழிலாளர்கள் எடுத்த கொழுந்தை நிறுக்க நிர்வாகம் மறுத்ததோடு ஆற்றில் கொண்டுபோய் கொட்டுமாறு கட்டளை இட்டதைத் தொடர்ந்தே வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

அட்டன் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் இந்த வேலை நிறுத்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தை 17ம் திகதி நடைபெற்றது. இதில் தோட்ட நிர்வாகிகள், தொழிற் சங்க பிரதிநிதிகள், 50க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கு பற்றினர். பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகள், நிர்வாகத்துடன் இணைந்தவாறு போராட்டத்தை குழிபறிப்பதற்கு தீவிர முயற்சி எடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

பேச்சு வார்த்தையில் தொழிற் சங்கங்களின் சார்பில் பிரதான பேச்சாளராகப் பங்கு பற்றிய இ.தொ.கா. அட்டன் பிரதேச பிரநிதி சிங் பொன்னையா, தொழிலாளர்களை சமாதானப்படுத்தி வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர நிர்வாகம் ஒரு சிறு மாறறத்தையாவது ஏற்படுத்த வேண்டும் என மன்றாடினார். ஆனால் நிர்வாகம சிறிதும் விட்டுக்கொடுக்க மறுத்ததுடன் இளம் தொழிலாளர்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள் என தொழிலாளர்கள் மேல் குற்றம் சுமத்தியது.

சிங் பொன்னையா பேச்சு வார்த்தையில் குறிப்பிட்டதாவது 'நாங்களும் வேலை நிறுத்தத்தை விரும்பவில்லை. தோட்டங்களில் எந்தவிதத்திலும் வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தக்கூடாது என இ. தொ. கா. தலைமை எனக்கு அறிவித்துள்ளது.அப்படி தொழிலாளர்கள் தன்னிச்சையாக வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தாலும் 24 மணித்தியாலத்தில் அவற்றை முடிவுக்கு

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்டைக்கு இலக்காகியும் வரும் சமயத்திலும் வாய்மூடி மௌனிகளாக உள்ள ஆசிரியர் சேவைத் தொழிற்சங்கங்களின் அதிகாரத்துவங்களையும், அத்தொழிற் சங்கங்களையும் கணக்கில் எடுக்குமிடத்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோசலிஸ்டுகள் இயக்கமும் கட்டி எழுப்பிய இந்த ஆசிரியர் - மாணவர்—பெற்றோர் மகாநாடு புரட்சிகரத் தன்மை கொண்டதாக விளங்குகின்றது.

## தொழிலாளி வர்க்க தலைமையில்

இலவசக் கல்வி உரிமையைப் பாதுகாப்பது உட்பட தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் சகல ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அவசியமான வெகுஜனப் போராட்டத்தினை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் அணிதிரட்டுவது, நடவடிக்கைக் குழுக்களின் பொறுப்பாக வேண்டும். பிரதேச ரீதியிலான கூட்டங்கள், மறியல்கள், ஊர்வலம் போன்ற பிரச்சார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யப் போராடுவதில் தொடங்கி வர்க்கப் போராட்ட நடவடிக்கைகளுக்காக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவது வரை நடவடிக்கைக் குழுக்கள் பொறுப்பேற்க வேண்டும். இச் சகல நடவடிக்கைகளும் வெகுஜனங்களைக் கட்டுப்படுத்தும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசுவதை இலக்காகக் கொள்ள வேண்டும்,

இந்த நடவடிக்கைக் குழுக்களில் முதலாளித்துவ வர்க்கத்தின் எந்தவொரு பேர் வழியோ அல்லது முதலாளித்துவத்துக்கு சேவகம் செய்யும் அதிகாரத்துவத்தின் எவரும் சரி சேர்ந்து கொள்ள முடியாத விதத்தில் இக்கமிட்டிகளின் இலக்குகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. அவர்கள் பங்குகொள்ள இடமளிப்பின் அதன் மூலம் நடவடிக்கைக் குழுக்கள் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களது அவசியங்களை பூர்த்தி செய்யும் போராட்டத்தின் கருவியாகுதல் தவிர்க்கப்படுகின்றது.

இலவசக் கல்வி உரிமையைக் காக்கும் போராட்டத்தினைப் பொறுத்தமட்டில் இந்த நடவடிக்கைக் குழுக்களின் பணியானது, ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி, அரசாங்கத்தினாலும் அதற்குப் பல்வேறு வழிகளிலும் ஒத்தூதுவதன் மூலம் ஆதரவு தரும் சமசமாஜ கம்யூனிச — நவசமசமாஜ—இ.தொ,கா.—மற்றும் அதிகாரத்துவங்களினால் ஸ்தாபிக்கப்படப்போகும் பாடசாலை அபிவிருத்தி சபை எனப்படுவதற்கு முற்றிலும் நேர் எதிரானதாகும். அதாவது ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியைக் காப்பதன் மூலம் இலவசக் கல்வியை அழித்தொழிக்க இருந்துவரும் வேலைத்திட்டத்துக்கு எதிராக முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி, சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் இலவசக் கல்வியை மறுசீரமைக்கும் பொருட்டு தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் பொறுப்பாகும்.

## பாதுகாப்பு கமிட்டிகள்

இப்பணியின் தன்மையில் இருந்து நடவடிக்கைக் குழுக்களின் நடவடிக்கைகளை சமாதான வழிகளில் ஒழுங்கு செய்ய முடியாது என்பது தெளிவாகுவது நிச்சயம். சகல ஜனநாயக உரிமைகளையும் புதைகுழிக்குள் தள்ளி, தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கட்டி எழுப்பப்படும் இராணுவ பாசிச சர்வாதிகாரத் திட்டங்களைத் தோற்கடிக்கும பொருட்டு, முதலாளித்துவ அரசப் படை அணிகளுக்கும் குண்டர் கும்பல்களுக்கும் எதிராகப் போராடும் பொருட்டு தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களைக் கொண்ட பாதுகாப்பு கமிட்டிகளையும் பாதுகாப்புப் படை அணிகளையும் நடவடிக்கைக் குழுக்களின் வழிநடாத்தலின் கீழ் அமைப்பது அவசியமாகின்றது.

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

இத்தகைய அரசியல், நடைமுறைத் தயாரிப்புக்கள் இலவசக் கல்வி உரிமை உட்பட அடிப்படை உரிமைகளைக் காக்க இன்றியமையாதது என்பதை மீண்டும் சுட்டிக் காட்டும் அதே சமயம், அத்தகைய வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டப் போராடும் ஒரே இயக்கம் அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே என்பதை நாம் இங்கு மீண்டும் கூறி வைக்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டம் பூராவும், அவ்வாறே உலகம் பூராவும் ஒடுக்கப்படும் மக்கள் இயக்கத்தை உலக சோசலிசப் புரட்சி முன்நோக்கின் அடிப்படையில் மறுசீரமைக்கும் நான்காம் அகிலத்தின் போராட்டத்தைப் பலப்படுத்தவும் முன்னெடுத்துச் செல்லவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு கோருவதுடன் இந்த அறிகையை முடிக்கின்றேன்; நன்றி.

---

றொத்சயில்ட் தோட்டம்:

# தொண்டமானின் வாக்குறுதியின் பின்னும் தோட்டம் துண்டாடப்படுகின்றது

புசல்லாவ றொத்சயில்ட் தோட்டத்தொழிலாளர்கள், தோட்டங்களை துண்டாடுவதற்கு எதிராக 20 நாட்களாக நடாத்திய வேலை நிறுத்தம், தொண்டமான் தலைமையினாலும் ஏனைய தொழிற் சங்கத் தலைமைகளினாலும் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

மகாவலித்திட்டத்தின் கீழ் ஒரு கூட்டம் கொத்மலைக் கிராமவாசிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் இனவாதசதிக்கு எதிராக புசல்லாவ றொத்சயில்ட் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த யூலை மாதத்தில் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருந்தார்கள்.

வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது தோட்டத்திற்கு விஜயம் செய்த இ.தொ.கா. தலைவரும், யூ. என். பி. அமைச்சருமான எஸ்.தொண்டமான், வேலை நிறுத்தத்தை நிறுத்தும்படியும், தோட்டங்களை துண்டாடுவதை நிறுத்துவதாகவும் கூறினார். ஆனால் வேலைநிறுத்தத்தின் பிற்பாடும் 36 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை'யிடம் கூறினார்கள். தொண்டமானின் தீர்மானத்தை ஏனைய தொழிற்சங்க தலைமைகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. இவ் வேலைநிறுத்தத்தில் இ.தொ.கா, N. U. W., ஸ்டாலினிச கம்யூனிசக் கட்சி தொழிற்சங்கம், யூ என்.பி.சார்பு தொழிற்சங்கத்தை சேர்ந்த 700க்கு மேற்பட்ட சிங்கள, தமிழ்த் தொழிலாளர்கள் பங்கெடுத்தார்கள். அத்துடன் மகாவலி அதிகார சபை வழக்குத் தாக்கல் செய்துள்ளது. தொழிற்சங்கத் தலைமை இவ் வழக்கின் தீர்ப்புக்காக காத்திருக்கும் படி கூறுகின்றது என தொழிலாளர்கள் கூறினார்கள்.

''20 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தோம். ஒரு பிரயோசனமும் இல்லை. எங்களுக்கு 20 நாட்கள் சம்பளம் இல்லாமல் போனது தான் மிச்சம். தோட்டங்கள் தொடர்ந்து துண்டாடப்படுகின்றது. வீடுகள் கட்டப்படுகின்றது. எங்களுக்கு வேலை இல்லாமல் போகும் ஆபத்து உள்ளது. ஏற்கனவே 16 வயதுக்கு மேற்பட்டோர் 175 பேர் பெயர் பதியப்படாமல் இருக்கின்றார்கள். தோட்டங்கள் துண்டாடப்படுமானால் உள்ள வேலையையும் இழக்க வேண்டிவரும். இதனால் தோட்டங்களில் வேலையில்லாப் பிரச்சனை மோசமடையும்'' என தோட்ட தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை'யிடம் கூறினார்கள்.

''எங்களுடைய தோட்டத்தை மகாராஜா கம்பனி எடுத்துள்ளது. கம்பனி எடுத்த பிற்பாடு நிலைமை இன்னும் மோசமடைந்துள்ளது. 25 நாட்களுக்கு வேலை அல்லது 25நாட்களுக்குரிய சம்பளம் வழங்கப்படும் என்று தொண்டமான் கூறினார். அப்படி வழங்கப்படாமல் 20 நாட்கள் வேலை வழங்குகிறார்கள். சனிக்கிழமைகளில் வேலை வழங்குவதில்லை. யூன்,யூலை மாதத்தில் 25 நாட்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டிருந்தும், அந்த மேலதிகச் சம்பளத்தை இப்பொழுது கழிக்க ஆரம்பித்துள்ளார்கள். 25 நாட்களுக்கு சம்பளம் என்பது ஒரு கேலிக்கூத்தாக உள்ளது'' என தொழிலாளர்கள் கூறினார்கள்.

---

# வேலைச் சுமையை எதிர்த்து..

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வர வேண்டும் என கட்டளையிட்டுள்ளது. உங்களிடம் நாங்கள் எதையும் டிமான்ட் பண்ணவில்லை. தொழிலாளர்களை கட்டுப்படுத்த சிறு மாற்றத்தை செய்யுமாறு கேட்கிறேன். நகுலேஸ்வரன் என்ற கே. பி. யை இரண்டு வாரம் இடைநிறுத்தி வையுங்கள். இதன் மூலம் தொழிலாளர்களைச் சாந்தப்படுத்தி இனிமேல் எந்த ஒரு போராட்டமும் வெடிக்காமல் தொழிலாளர்களை கட்டுப்படுத்தும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.'' ஏனைய தொழிற் சங்கத் தலைமைகளும் சிங். பொன்னையாவின் இவ் வாதத்திற்கு ஒத்தூதினார்கள்.

நகுலேஸ்வரன் என்ற கணக்கப்பிள்ளையை இரண்டு வாரம் இடைநிறுத்துவது, 63 தொழிலாளர்களுக்கு 13ம் திகதி பெயர் வழங்குவது என்ற சிறு மாற்றத்துடன் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் நிர்வாகத்துடன் ஒப்பந்தத்திற்கு வந்து, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற தீர்மானம் எடுத்தனர்.

ஆனால் தொழிலாளர்கள் இதனை ஏற்க மறுத்து, நாங்கள் வேலை நிறுத்தத்தை தொடருவோம் என கோசம் எழுப்பினார்கள். ''நாங்கள் 4 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தது இதற்காகத் தானா? 15 கோரிக்கைகள் வைத்தோம். முக்கிய கோரிக்கைகள் எதையும் பேச்சுவார்த்தைக்கு எடுக்கவில்லை. ஆங்கிலத்தில் பேசி எங்களை ஏமாற்றிவிட்டார்கள். நாங்கள் வேலைநிறுத்தத்தை கைவிட மாட்டோம்.'' என்று கோசம் எழுப்பியவாறு தொழிலாளர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறினார்கள்.

---

குயின்ஸ்பெரி தோட்டம்

# தொழிலாளர் கம்பனி அதிகாரிகளை 'கேரோ' செய்தனர்

கொத்மலை. குயின்ஸ்பெரி தொழிலாளர்கள், இத்தோட்ட தொழிற்சங்கங்களின் தலைவர்கள் ஆறு பேரை வேலைநீக்கம் செய்ததை எதிர்த்து நவம்பர் 14ம் திகதி கம்பனி அதிகாரிகளை 'கேரோ' செய்தனர். 24 மணித்தியாலம் பங்களாவில் இருந்து வெளியேற முடியாமல் கம்பனி அதிகாரிகள் உள்ளே இருந்தனர்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையின் பின்பு தொழிற்சங்கத் தலைவர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவதை கம்பனி நிர்வாகம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து 'கேரோ' முடிவுற்றது.

தோட்டங்களை கம்பனி எடுத்த பிற்பாடு தோட்ட நிர்வாகம், மருந்து தெளிப்பதை 1 ஏக்கரால் கூட்டியதை அடுத்து, நவம்பர் 6ம் திகதியிலிருந்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்திருந்தார்கள். இவ்வேலை நிறுத்தத்தினால் தோட்டத்தில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என தோட்ட நிர்வாகம் கூறி, தொழிற்சங்கத் தலைவர்கள் ஆறு பேரை வேலை நீக்கம் செய்தது இவ்வேலை நிறுத்தத்தில் இ. தொ. கா, மலையகத் தொழிலாளர் முன்னணி, இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்கம், அ. ஜ. தொ. கா. ஆகிய தொழிற்சங்கங்களின் தொழிலாளர்கள் பங்குபற்றினார்கள்,

---

### திருத்தம்

கடந்த இதழின் (1992/12/25) 10ம் பககத்தில் அட்டன்-பெரிய டன்பார் தோட்ட வேலை நிறுத்தம் பற்றிய செய்தி 'இதறகு தொழிற் சங்க தலைமை ஒத்துழைப்பு கொடுக்கின்றது. என்று மற்றுமோர் தொழிலாளி கூறினார்' என்பதுடன் நிறைவு பெறுகின்றது அதனை கீழேயுள்ள செயதியின் முழு அறிக்கை இவ்விதழில் 6ம பக்கத்தில் வெளியாகின்றது. தவறுக்கு வருந்துகினறோம்,

ஆ—ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானின் இ. தொ. கா ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் உட்பட முழுத் தொழிலாள வர்க்கத்தின் உள்ளும் சிருஷ்டித்த அரசியல் குழப்பத்தினை பிற்போக்காளர்கள் மூலதனமாக்கிக் கொண்டுள்ளனர்.

ஸ்டாலினிச, சமசமாஜ தலைவர்கள் (நவசமசமாஜ தலைவர்கள் உட்பட) 1964 முதலாளித்துவ சி. ல. சு. க. கூட்டரசாங்கத்தில் சேர்ந்ததன் பின்னர் பாராளுமன்றத்தில் முதலில் நிறைவேற்றப்பட்ட ஒரே 'முக்கிய' மசோதா, சிரிமா—சாஸ்திரி உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அது இலட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடு கடத்துவதை இலக்காகக் கொண்டிருந்தது. நகர்ப்புற—தோட்டப்புற தொழிலாளர்களிடையேயான ஐக்கியத்தினைச் சிதறடித்த இம்மசோதா, முதலாளித்துவ சிறீலங்கா—சமசமாஜ—கம்யூனிச அரசாங்கத்தின் மரண பேரிகையாகவும் விளங்கியது. ஒரு சில மாதங்கள் கழிவதற்குள் கிளர்ந்து எழுந்து வந்த தொழிலாளர் போராட்ட அலைக்கு எதிராகக் கரங்களைப் பலப்படுத்திக் கொண்ட பிற்போக்காளர்கள், பாராளுமன்ற சதி மூலம் கூட்டரசாங்கத்தை வெளியேற்றி, 1965ல் யூ. என். பி. அரசாங்கத்தை மீண்டும் ஆட்சிக்குக் கொணர்ந்தனர்.

## கூட்டரசாங்கம்

1970—77 கூட்டரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, தமிழர் விரோத இனவாதப் போக்கானது தொண்டமானின் பிற்போக்குக்கு இடையிலும் இ. தொ, கா. வினுள் தோட்டத் தொழிலாளர்கள் திரள்வதற்கு மேலும் உதவியது. அதுமட்டுமன்றி 1977ல் ஆட்சிக்கு வந்த யூ. என். பி. அரசாங்கத்தின் காட்டுமிராண்டி அடக்குமுறையினதும் இனவாத யுத்தத்தினதும் ஜவான்களாக தொண்டமானும், சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ தலைவர்களும் ஓரணியில் இருந்து கொண்டு ஆற்றிய அலுகோசுப் பாத்திரத்தினால் இவர்களிடையே எந்தவொரு வேறுபாட்டையும் தொழிலாளர்கள் கண்டு கொள்ள முடியவில்லை. தொண்டமானது இ. தொ, கா, வின் மரணம் இந்த விதத்திலேயே ஒத்திப் போடப்பட்டு வந்தது.

சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ தலைவர்களால் தோட்டத் தொழிலாளர்களை முதலாளித்துவ அரசாங்கங்களின் வாசல் காவலர்களாக நிறுத்திவைக்க முடியவில்லை. அவ்வாறே இ. தொ. கா, தலைவர்களால் அவர்களை நீண்ட காலத்துக்கு வர்க்கப் போராட்டத்தில் இருந்து வெளியே தள்ளி வைக்கவும் முடியவில்லை. பிற்போக்கு அதிகாரத்துவங்களின் நடவடிக்கைகளைக் காட்டிலும் வரலாற்று விதிகள் பலம் வாய்ந்தவை.

கடந்த சில வருடங்களாக இ. தொ. கா, அங்கத்தவர் தொகை நான்கு இலட்சத்தில் இருந்து இரண்டு இலட்சங்களுக்கும் குறைவாக—சரி அரைவாசியாகக் கரைந்தமையும் தொண்டமானின் கட்டளைகளை எதிர்த்துக் கிளர்ந்து இ. தொ. கா. தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களில் கலந்து கொண்டமையும், இப்போது ஒரேயடியாக பத்தாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இ. தொ. கா, வை விட்டு வெளியேறியமையும் அந்த வரலாற்று விதிகளைச் சுட்டிச் காட்டுகின்றன. இ. தொ. கா. அங்கத்தவர்களை உடைத்துக் கொண்டு தனியொரு அமைப்பை அமைக்க முன்வந்த பீ. சந்திரசேகரன் மாதக் கணக்காக சிறையில் வாடும் ஒடுக்குமுறை நிலையில் கூட தமது தொழிற்சங்கத் தொழிலாளர்களிடையே தோன்றிய கிளர்ச்சியை தொண்டமானால் நசுக்கிவிட முடியாது போய்விட்டது.

## வெடிப்புக்கான உடனடிக் காரணி

யூ. என். பி. அரசாங்கத்தின் தோட்டத் தனியார் மயமாக்க வேலைத் திட்டமும், அதற்கு தொண்டமான் தலைமை வழங்கிய ஆதரவும் இ. தொ. கா, வின் வெடிப்பை விரைவுபடுத்திய இறுதிக் காரணிகளில் முதலிடம் பெறுகின்றது. சமசமாஜ தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வா 'முட்டைப் பொரியலை திரும்பவும் முட்டையாக்கிவிட முடியாது' என ஜம்பம் அடித்த தோட்டத் துறை முதலாளித்துவ அரசுடமையாக்கல் திரும்பவும் பன்னாட்டு ஏகபோகக் கம்பனிகளின் தோட்டக் கையேற்புடன் தொண்டமானின் காய்ந்த பொய்ப் பாய் 'ஆயிரம் தூள்களாக கிழிந்து போகத் தொடங்கியது. ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஜவானாக தோட்டத் தொழிலாளர்கள் சகலரினதும் குடியுரிமையைப் பாதுகாப்பதில் தாம் வெற்றி கண்டுள்ளதாக கூறிய தொண்டமானின் வாய் வீச்சுக்கள் இங்ஙனம் முதலில் கிழிந்து பறந்தது குறிப்பிடத்தக்கது. இப்போது 1993 வரவு செலவுத் திட்டத்தின் சம்பள அதிகரிப்பு எனப்படுவது தோட்டத் தொழிலாளியின் வருடாந்த வேலை நாட்களின் எண்ணிக்கையை 300ல் இருந்து 240 ஆக—நூற்றுக்கு 20%தால் வெட்டிக் குறைப்பதையும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிப்புக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பு வழங்குவதை நிறுத்துவதையும் தோட்டத் தொழில்களை இலட்சக் கணக்கில் வெட்டி வீழ்த்துவதையும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தின் குரல் வளையை நெரிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளது. இ. தொ. கா, தலைமையின் கடைகெட்ட காட்டிக் கொடுப்புகளை இனியும் சகித்துக் கொள்ள முடியாத கட்டத்தினை அடைந்துள்ள தொழிலாளர்கள் புரட்சிகரப் போராட்டங்களில் குதிப்பார்கள் என்ற பீதியினால் கலங்கிப் போயுள்ள தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் ஒரு பிரிவினர் தொழிலாளர்களை தொண்டமானில் இருந்து பிரித்து காமினி திசாநாயக்கவிடம் சேர்க்கப் பாய்ந்துள்ளனர். எனவே தான் நாம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்திற்குத் தள்ளப்படும் தொழிலாளி வர்க்கத்தினை முதலாளித்துவ முறையைக் கட்டிக் காக்கச் சபதம் பூண்ட எந்தவொரு அமைப்பினுள்ளோ அல்லது முதலாளித்துவச் சார்பு தலைமையின் கீழோ பிணைத்துப் போட்டுவிட முடியாது எனச் சுட்டிக் காட்டுகின்றோம். மார்க்சிச முன்நோக்கு தயார் செய்யப்படுவது சமூகத்தின் வயிற்றில் தொழிற்படும் சடரீதியான முரண்பாடுகளின் அபிவிருத்தி, சமூக உறவுகளில் உண்டுபண்ணும் ஆழமான மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டேயன்றி வெளித்தோற்றத்தில் அங்குமிங்குமாக இடம் பெறுவதைக் கொண்டு அல்ல.

## உலக நிலைமை

உற்பத்திச் சக்திகளில் ஏற்பட்டுள்ள முன்னொருபோதும் இல்லாத அபிவிருத்தி, யுத்தத்தின் பின்னைய உலக அமைப்புக்கு இன்று குழிபறித்துள்ளது. இது கட்டுப்பாட்டுக்குட்பட்ட உலக ஏகாதிபத்திய அமைப்புக்கும் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கும் இடையேயான உயிராபத்தான மோதுதல்கள் கொண்ட கட்டமாக மாற்றம் அடைந்துள்ளது. அத்தோடு ஏகாதிபத்தியத்தின் முக்கிய முண்டுகோலாக விளங்கிய சீர்திருத்தவாத, ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் ஒன்றில் வீழ்ச்சி கண்டுள்ளன அல்லது வீழ்ச்சி கண்டு வருகின்றன. இந்நிலையில் சகல வகையிலான அதிகாரத்துவங்களும் சகல முகமூடிகளையும் களைந்து விட்டு, ஏகாதிபத்தியத்தின் கடைகெட்ட சகாக்களாக மாறியுள்ளன. அவர்களின் அமைப்புக்கள் பிற்போக்கு முதலாளித்துவ அமைப்புக்களாகத் திரும்பியுள்ளன. சகல நாடுகளிலும் அதிகாரத்துவங்களுக்கும் தொழிலாளர் ஆதரவாளர்களுக்கும் இடையே ஈடுசெய்ய முடியாத துருவப்படுத்தலைக் காணமுடிகின்றது.

இ. தொ. கா. வும் சேர்ந்து நடாத்தி வரும் ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி, அரசாங்கத்தின் ஒரு தொகைத் தாக்குதல்களின் எதிரில் தொண்டமான் தலைமையில் இருந்து பிரிய, அல்லது அதற்கு எதிராகப் போராடத் தீர்மானம் செய்யும் தொழிலாளர்கள், அவர்களின் கெட்ட கனவுகளில் கூட சமசமாஜ—ஸ்டாலினிச—நவசமசமாஜ தலைமைகளின் கீழ் அணிதிரள்வதைப் பற்றி நினைத்தும் பார்க்க மாட்டார்கள். தொண்டமானின் தொழிற்சங்கத்தைப் போலவே இந்த துரோகத் தலைவர்களின் தொழிற்சங்கங்களையும், கட்சிகளையும் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்தும் சேவை செய்யும் அமைப்புக்களாகக் கருதுவதைத் தொழிலாளர்கள் கைவிட்டுள்ளார்கள்,

புதிதாகக் கிடைத்துள்ள செய்தி இது தான்: தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை இரத்தத்தில் மூழ்கடிக்க இடம்பெறும் இனவாத யுத்தத்தின் பலத்தின் அடிப்படையில் யூ. என். பி. – சி. ல. சு. க, கட்சிகள் இரண்டும் சேர்ந்து, பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்த பிற்போக்கு யோசனைக்கு சமசமாஜ—ஸ்டாலினிச —நவசமசமாஜ தலைவர்கள் கும்பலின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. தமிழ்ப்பேசும் தோட்டத் தொழிலாளர்கள் இந்நிலையில் இததுரோகத் தலைவர்களை நெருங்குவதைப் பற்றி கனவிலும் நினைக்கப் போவதிலலை, இது ஒன்றும் புதுமையல்ல.

## இன்று அவசியப்படுவது

தோட்டத் தொழிலாளர்களைப் போலவே முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் இனறு அவசியமாகியுள்ளது புரட்சிகர வேலைத் திட்டமும், அதன் அடிப்படையில் வர்க்க இயக்கத்தை வழி நடாத்தும் மாற்று அமைப்புமே. அதனை அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே நிறுவிக் கொண்டுள்ளது,

## வேலைத்திட்டம்

'யூ. என். பி. தாக்குதல்களுக்கு எதிரான போராட்ட வேலைத்திட்டம்' என்ற தலைப்பில் 1992 மார்ச்சில் கொழும்பில் கூடிய தொழிலாளர் பேராளர் மகாநாட்டில் புரட்சிக கம்யூனிஸ்ட் கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் பின்வருமாறு கூறியது:

''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தினை ஒரு தொழிற் சங்கமாக ஆரம்பித்துள்ளதன் நோக்கம் புரட்சிகரவேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்களை சேர்த்துக் கொண்டு அணிதிரள்வதே.

''தோட்டத்தில் வேலையிழக்கும் ஒரு தொழிலாளி சகலத்தையும் இழக்கின்றான். குடியுரிமையும் இல்லாத

(12ம் பக்கம் பார்க்கவும்)

# 1993புரட்சிக் கட்சியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்களின் போர்க்களமாக்கியமையும் ஏகாதிபத்திய அலுகோசுத் திட்டங்களின் நடவடிக்கைகளே.

இந்நிலையில் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும். ஆசியாவிலும் உள்ள பின் தங்கிய நாடுகளின் ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கங்களின் அதி உச்சமான பிற்போக்கானது, ஏகாதிபத்திய படைகளுடன் ஓரணியில் நின்று இந்தியக் கடற்படைகள் சோமாலிய ஆக்கிரமிப்புக்கு பயன்படுத்தப்பட அனுப்பப்பட்டமை எடுத்துக்காட்டுகின்றது. நரசிம்மராவ் அரசாங்கம் இந்த ஆக்கிரமிப்புப் படைகளை இந்தியாவினுள் தேசிய, மத ஒடுக்குமுறையின் பயங்கர வேளையைப் பார்த்து அனுப்பி வைத்துள்ளது, இலட்சோப லட்சம் தொழிலாளர்களின் தொழில்களை அழிப்பதிலும், ஏழை விவசாயிகளின் வாழ்க்கைப் பாதையை ஒழித்துக்கட்டுவதன் மூலமும் அவர்களை பஞ்சத்தின் பிடிக்குள் தள்ளிவிடும் வேலைத்திட்டத்தினை ஏகாதிபத்திய நிதி மூலதனத்துடன் கூட்டுச் சேர்ந்து நடைமுறைப்படுத்துகையிலேயே இதைச் செய்துள்ளது.

இலங்கையில் பிரேமதாச அரசாங்கத்தின் வரலாறு இதற்கு ஒன்றும் குறைந்ததல்ல. 1993 ஆரம்பத்துடன் வட—கீழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான இனவாத யுத்தத்தினை படுமோசமாக உக்கிரமாக்கியுள்ள யூ. என். பி. அரசாங்கம், தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் சகல ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளையும் பிடுங்கிக் கொள்ளும் கொடிய ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ளது.

அரசாங்கத்தினதும் கூட்டுத்தாபனங்களினதும் நிர்வாகத்தில் இருந்து வந்த கைத்தொழில், வாணிக, சேவைத் துறைகள் அனைத்தும் தனியார் மயமாக்கப்பட்டு இலட்சக்கணக்கில் தொழில்கள் ஒழித்துக் கட்டப்பட்டுள்ளன. அத்தோடு இலவசக் கல்வி, இலவச சௌக்கிய சேவை முதலிய அடிப்படை நலன் புரி சேவைத் துறைகளைத் துடைத்துக்கட்டும் வாக்குறுதிச் சீட்டில் பிரேமதாச அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது. இது உலக வங்கி கட்டளையின் பேரிலேயே செய்யப்பட்டுள்ளது என்பது இப்போது அம்பலமாகியுள்ளது. இந்த நாச வேலையில் கைபோட்டதோடு கடந்த ஆண்டு இறுதியில் வெடித்த ஆசிரியர்— மாணவர் — பெற்றோர் போராட்டங்களைக் கரைக்கும் பொருட்டு துரோகத் தலைவர்களின் உதவியுடன் யூ. என். பி. அரசாங்கம் பரப்பிய 'பாடசாலை கட்டணம் அறவிடுவது இல்லை' என்ற பிரச்சாரத்தின் வாடையைத் தன்னுமின்று காணமுடியவில்லை. தொழில், நலன்புரி அழிவுகளின் ஜெயிலர்களான யூ. என். பி, யின் நடவடிக்கையை மதிப்பீடு செய்ய ஒரு

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1993: புரட்சிக் கட்சியை நிர்மாணிக்கும்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

சிறை ஆணையாளர் குழு — சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு—இந்த ஜனவரியில் இந்த நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

இந்த அழிவுடன் சேர்ந்து சனத்தொகையின் பெருந்தொகையினரின் —மத்தியதர வர்க்கத்தினர் உட்பட— உணவு,பானங்கள், இருப்பிடம் அனைத்தையும் பாதிக்கும் விதத்தில் ரூபாவை மதிப்பிறக்கம் செய்வதிலும் பண்டங்களின் விலைகளை உயர்த்துவதிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது, சம்பள அதிகரிப்பு என்ற மோசடியின் கீழ் ஒரு தொழிலாளி முன்னைய சம்பளத்தின் கீழ் விலைக்கு வாங்கிய பொருட்களைத் தன்னும் வாங்க முடியாத ஒரு நிலை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் மாதாந்த சம்பளத்தினை நூற்றுக்கு இருபது வீததத்தினால் வெட்டும் விதத்தில் வருடாந்த வேலை நாள் 300ல் இருந்து 240 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த அழிவுகள் அனைத்தையும் பொது மக்களின் மேல் திணிப்பதை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், மத்தியதர வர்க்கத்தினரின் எதிர்ப்பின்றி செய்ய முடியாது என்பதை பிரேமதாச அரசாங்கம் அறியும்.ஆதலால் பிரேமதாச அரசாங்கம் தாம் முன்னர் திரித்துக் கொள்ள முயன்ற ஜே. வீ, பி, யின் பாசிச குண்டாந்தடி உடைந்து போனதன் பின்னர், இன்று மீண்டும் அப்பட்டமான அரச பொலிஸ்—இராணுவ பயங்கரத்தினைப் பயன்படுத்துவதை விஸ்தரித்துள்ளது. யூ. என், பி. அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையில் இருந்து பலன் பெறும் நம்பிக்கை கொண்டிருந்த மத்தியதரவர்க்க, குட்டி முதலாளித்துவ பிரிவினரும் கூட தப்பிவிட முடியாத விதத்தில் பொருளாதாரத்திலும்,சமூகத்திலும் ஏற்படும் துருவப்படுத்தல் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சி தேடிக்கொண்டுள்ள அப்பட்டமானதும் கொடியதுமான ஒடுக்குமுறையினை முதலாளித்துவ பத்திரிகையாளர்களுக்கும், பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கும் எதிரான இன்றைய அடக்குமுறை சுட்டிக்காட்டுகின்றது.

வேலை நிறுத்தம் செய்த 'குற்றத்துக்காக' யூ.என்,பி, அரசாங்கத்தினால் வேலைகளில் இருந்து தள்ளப்பட்டடசின் கணக்கான தொழிலாளர்களைத் தற்கொலை செய்து உயிரைப் போக்கும் அவல நிலைக்குத் தள்ளியது. துரோகத் தொழிலாளர் அதிகாரத்துவங்களின் ஒத்துழைப்புடன் இதைச் சாதித்த பிரேமதாச அரசாங்கம், முன்னர் சமூக நாசகாரர்கள் என்ற பேரில் வேலை நிறுத்தக்காரர்களுக்கு எதிராக—பொய் வாக்குறுதி வழங்கி அணிதிரட்ட எதிர்பார்த்த விவசாயிகளுக்கும் இன்று அதே தலைவிதியையே வழங்கியுள்ளது. தம்புள்ள, மாத்தளை போன்ற இடங்களில் தக்காளி, பெரிய வெங்காயம் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பலர் தற்கொலை செய்யக் காரணம், பன்னாட்டு ஏகபோகங்களின் பொருளாதார உபாயங்களினால் கண்ட அழிவுப் பெறுபேறுகளே, இதன் மூலம் சமூகரீதியில் இன்று உக்கிரம் கண்டுவரும் துருவப்படுத்தலும் யூ. என், பி, அரசாங்கம் முகம் கொடுத்துள்ள சமூகத் தனிமைப்படுத்தலும் உக்கிரமடைந்துள்ளமை அம்பலமாகியுள்ளது.

## எதிர்க்கட்சி இல்லை

ஜனாதிபதி பிரேமதாச தமது அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சி கிடையாது எனச் செய்யும் ஜம்பம், அதே வாயில் இருந்து வந்த போதிலும் பொய் அல்ல, உண்மையில் பிரேமதாச ஆட்சிக்கு எதிரான அரசியல், இயக்க ரீதியிலான எதிர்க்கட்சி மட்டுமன்றி வேலைத்திட்ட அடிப்படையிலான எதிர்க்கட்சியும் இல்லாமல் போயுள்ளது.

யூ, என். பி ஆட்சியை எதிர்ப்பவர்களாகக் காட்டிக் கொள்ள முயலும் முதலாளித்துவ சி. ல, சு. க. உள்ளே இழுபறிகளில் ஈடுபட்டுள்ள குழுக்களைப்போலவே அந்த ஒட்டை உடைசல்களுக்கு ஒட்டுப் போடும் சமசமாஜ — ஸ்டாலினிச— நவசமசமாஜ உள்ளடங்கலான சகல சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்களும் பிரேமதாச ஆட்சியால் பராமரிக்கப்படும், அவரின் ஆசனத்தின் கீழேயோ அல்லது மேலேயோ பதுங்கிக் கொள்ளும் தரகர்களாக மாறியுள்ளனர். இறைவழிபாடு செய்யும் சாட்டில் இத்தலைவர்கள் பிரேமதாச ஆட்சியின் எதிரில் காலையும், மாலையும் பிரார்த்தனை செய்கின்றார்கள். இன்னும் இரண்டு ஆண்டுகள் செல்லும் வரை ஜனாதிபதி தேர்தலை நடாத்தப் போவதில்லை யென ஜனாதிபதி பிரேமதாச வாயடித்துக் கொள்கின்றார். இதற்கு 'ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும்' சகல மோசடிகளதும் நாணயக் கயிறு தமமிடம் இருக்கிறது என்பதை அவர் நிச்சயம் அறிந்து கொண்டுள்ளதே காரணம்.

சமசமாஜ—கம்யூனிச— நவசமசமாஜ — பாலாதம்பு போன்ற துரோகத் தலைவர்களின் யூ. என். பி. எதிர்ப்பானது குளிர்யுத்த காலத்தில் ஸ்டாலினிஸ்டுகள் கடைப்பிடித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு எனப்படுவதற்கு எதுவிததத்திலும் வேறுபட்டதல்ல. குளிர் யுத்தம் என்ற பேரில் ஸ்டாலினிஸ்டுகள் பனிக்கள்வர்களைப் போல வேடம் பூண்டு சோவியத் யூனியனுககுரிய சகலவற்றையும ஏகாதிபத்தியவாதிகளுக்கு விற்றுத் தள்ளும் கொம்பிரதோர் வேலையில் குதிக்கத் தயாராகி வந்தனர். இதே வழியில் சென்றுகொண்டுள்ள சமசமாஜ உட்பட சகல சந்தர்ப்பவாதத் தலைவர்களும் யூ, என், பி. க்கு எதிராக ஒரு பதிலீட்டைக் கட்டி எழுப்புவார்கள் என ஒரு கணம் தன்னும் சிந்திப்பது உயிராபத்தான நப்பாசையாகும்.

சகல தேசியவாத, சந்தர்ப்பவாத நப்பாசைகளையும் நிராகரித்து, தொழிலாளி வர்க்க அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் மூலம் மட்டும்ே ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச ஆட்சிக்கும், இந்தியத் துணைக்கண்டத்திலும் ஆசியாவிலும் நிலவும் ஏகாதியத்தியத்தின் பிடிக்கும் அதன் தரகர் ஆட்சிகளுக்கும் எதிராகத் தொழிலாள வர்க்கத்தையும். ஒடுக்கப்படும் மக்களையும், அரசியல் ரீதியில் அணிதிரட்ட முடியும். புரட்சிக் கட்சி எடுக்கும் அத்தகைய ஆரம்பிப்பு பின்தங்கிய நாடுகளில் வாழும் கோடானு கோடி ஏழைகளையும் இளைஞர்களையும் உலக சோசலிச புரட்சியின் சகாக்களாக மாற்றும்.

ஏகாதிபத்திய உலக நெருக்கடியின் கீழ் வெடிப்புக்களைக் கட்டாயமாக்கியுள்ள வர்க்கப் போராட்டமே இத்தகைய ஒரு ஆரம்பத்துக்கான வாய்ப்பிற்குக் கதவுகளைத் திறந்துள்ளது.

## புரட்சித் தலைமை

இந்தப் பணிக்குப் பொருத்தமான புரட்சித் தலைமையை அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலம் மட்டுமே தயார் செய்கின்றது. இதற்குப் புறம்பாக ஆசியாவில் எந்தவொரு நாட்டிலோ அல்லது இந்தியத் துணைக்கண்டத்தின் எந்தவொரு நாட்டிலோ அல்லது இலங்கையிலோ ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து மீட்சி பெறும் வழியைத் தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களுக்குக் காட்டும் புரட்சிகரக் கட்சி நிர்மாணிக்கப்படப் போவதில்லை. எனவே தான் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர் கழகமும் தொழிலாளி வர்க்கப் புரட்சி கட்சியை நிர்மாணிக்கும் ஆண்டாக 1993ஐ கொள்ளவேண்டும்.

ட்ரொட்ஸ்கிசத்தின் தசாப்தத்திலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25வது ஆண்டு நிறைவிலும் தொழிலாளி- ஒடுக்கப்படும் மக்களின் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான பிரச்சினையான தொழிலாளர் வர்க்கத் தலைமை நெருக்கடியைப் புரட்சிகரமான முறையில் தீர்க்கச் சபதம் பூணும்படி நாம் உங்களுக்கு விடுக்கும் அழைப்பினை சகல போராளிகளும் தீர்க்கமானதாகக் கொள்ள வேண்டும். இப்பிராந்தியத்தின் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் வரலாற்றுத் தேவைகளில் காலூன்றிய [illegible] கள் மூலம் அரசியல் ரீதியில் முன்செல்ல முடிவு செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதற்கு தங்களின் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டுகின்றது.

புரட்சிக் கட்சியாக தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட அவசியமான கோட்பாட்டு, அரசியல், அமைப்பு நடவடிக்கைகளில் ஒரு பாய்ச்சலுக்கு நாம் ஆயத்தமாவோம். அந்த விதத்தில் நாங்கள் முன்வைக்கும் கீழ்வரும் இலக்குகளை வென்றெடுப்பதற்கு தங்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியம், நாம் வேண்டுவது தங்களின் மேலதிக காலத்தையோ அல்லது தங்களின் வருமானத்தின் மிச்ச சொச்சங்களையோ அன்றி நிஜமான தியாகத்தினையே.

நாம் திட்டமிட்டுக் கொண்டுள்ள எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் இவைதான்:

1. தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளின் பக்கங்களை 4 பக்கங்கள் வீதம் அதிகரித்தல், இதன்படி தொழிலாளர் பாதை பக்கங்கள் 12 ஆகவும் கம்கறு மாவத்த பக்கங்கள் 16 ஆகவும் மாறும். இதன் மூலம் அப்பத்திரிகைகள் முன்வைக்கும் அரசியல் ஆய்வுகளையும்,முன்நோக்கினையும், வேலைத்திட்டத்தினையும் விரிவாகவும், உயிர்ப்புஷ்டியாகவும் வழங்க வாய்ப்புக் கிடைக்கும். உலகக் கட்சி இன்று ஐந்து கண்டங்களிலும் ஈடுபட்டுக் கொண்டுள்ள அரசியல் போராட்டம் பற்றிய சித்திரத்தினை இலங்கைத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு வழங்க இதன் மூலம் பெரும் வாய்ப்பு ஏற்படும். பத்திரிகைகளில் ஏற்படும் இந்த அபிவிருத்தி நிலைமைகளின் கீழ் பல்வேறு கலை, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார அம்சங்கள் கொண்ட கட்டுரைகளும் எமது பத்திரிகைகளில் பிரசுரமாகும்.

ஸ்டாலினிச, சீர்திருத்தவாத மற்றும் சந்தர்ப்பவாத தலைமைகளால் பெரும் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள மார்க்சிச அரசியல் கலாச்சாரத்தினை தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களிடையே மீண்டும் புனருத்தாரணம செய்வதில் தொழிலாளர் பாதை, கமகறு மாவத்த பததிரிகைகளுககு பெரும் பணி ஏற்படுகின்றது.

2, வெளியீடுகளைப் பொறுத்தமட்டில மார்க்சிச இலக்கிய நூலகள் — சிறப்பாக லியோன ட்ரொட்ஸ்கியின் ஆக்கங்களை முதற்தடவையாக தமிழிலும் சிங்களத்திலும பிரசுரிகக நாம் ஆரம்பித்துள்ள பணிகளை மேலும் விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏறகனவே இப்பணியில் ஈடுபட்டுள்ள மொழிபெயர்ப்புக கமிட்டி இதறகான பணியில் ஈடுபடும். அவர்களின மொழிபெயர்ப்பு படைப்புககளை அச்சிட்டு உங்கள் கரங்களுக்குக் கொணர்வதை நாம் ஊர்ஜிதம் செய்கின்றோம்.

3. பு. க. க.வுக்கு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி நடைபெறும் அரசியல் பிரச்சாரம், பிராந்திய கூட்டங்கள், தத்துவார்த்த கல்வி வகுப்புக்கள், கருத்தரங்குகள், நூல் கண்காட்சிகள் முதலான நடவடிக்கைகளின் உச்சக் கட்டமாக ஜூன் கடைப்பகுதியில் கொழும்பில் நடைபெறும் கூட்டம் விளங்கும்,

4. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அனைத்துலகப் புரட்சிகரப் பொறுப்புக்களுக்கு கைகொடுக்கும் பொருட்டும் புரட்சிக் கட்சியை நிர்மாணிப்பதுடன் தொடர்புடைய ஏனைய அமைப்பு பணிகளை முன்னிட்டும் கட்சி அபிவிருத்தி நிதியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இது ரூபா. 500,000 கொண்டது. 1993ன் முதல் 6மாதங்களுள் இதனை பூர்த்தி செய்யும் பொருட்டு கட்சி அங்கத்தவர்களதும் தொழிலாளர் பாதை கம்கறு மாவத்த வாசகர்களதும் கட்சியின் ஆதரவாளர்கள் அனுதாபிகளதும் உயர்ந்த பங்களிப்பினை நாம் எதிர்பார்க்கின்றோம்.

இச் சகல தயாரிப்புகளும் தொழிலாளி வர்க்க ஒடுக்கப்படும் மக்களிடையே (அ) தொழிலாள வர்க்க அனைத்துலகவாத (ஆ) சோசலிசப் புரட்சித் தலைமையை ஸ்தாபிதம் செய்வதற்கே.

உலக சோசலிசப் புரட்சி முன்நோக்கின் கீழ் இலங்கை-தமிழ் ஈழம் சோவியத் சோசலிச குடியரசினை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி. அரசாங்கத்தையும் முதலாளித்துவ அரசினையும் ஒழித்துக்கட்ட சிங்கள, தமிழ் தொழிலாளி— ஒடுக்கப்படும மக்கலள அணிதிரட்ட அத் தலைமை தோள் கொடுக்க வேண்டும். அதன் வரலாற்றுப் பணி அதுவே; அதன பேரில் நடாததும் போராட்டம் இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசினை வெற்றி கொள்ளும போராட்டத்தின ஒரு பாகமாகும்.

இதிலிருந்து தோன்றும் திட்டவட்டமான தேவை என்ன? இன்னும் பல டசின கணக்கான முழுநேர தொழில்சார் புரட்சியாளர்களை வஞ்ஞான பூர்வமான சோசலிசக கோட்பாட்டு, முனநோக்கினால் ஆயுதபாணியாக்கி, உலக சோசலிசத்தன் வேலைததிட்டத்திறகாகப் போராடப் பயிற்றி யெடுப்பதே.

இந்தப் பொறுப்புக்களைக் கொணடுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முதலாளிதது வக் கட்சிகளாகச் சீரழிந்து போன சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ கட்சிகளில் இருந்து எவ்வளவுக்கு வேறுபட்டது என்பது தொழிலாள— ஒடுககப்படும் மக்களிடையே இப்போது வெளிச்சமாகியுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற சமசமாஜககட்சி மகாநாட்டிற்கு சுயணசிரி லியனகே போன்ற அரசியல் நடோடிகளால் எழுதிச் சமர்ப்பிக்கப்பட்ட

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானின் இ.தொ.கா. ..

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் வேறு ஒரு தோட்டத்தில் அல்லது மாகாணத்தில் தொழில் தேடிக் கொள்ள முடியாது. அவனின் வீடு கூட அவனுக்கு இல்லாது போகின்றது, உதவி மானியம் பெறும் உரிமை மட்டுமல்ல கடன் பெறும் உரிமையும் குழந்தைகளின் கல்வி உட்பட ஏனைய சகல உரிமைகளும் இல்லாமல் போகின்றது. இந்நிலைமையின் கீழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை பேணுவது ஏதோ ஒருவிதத்தில் பாராளுமன்ற -சீர்திருத்தவாத வேலைத்திட்டத்தின் கீழ் இடம் பெறக் கூடிய ஒன்றல்ல எனப் புதிதாகச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. தோட்டத் தொழிலாளர்களிடையே கட்டியெழுப்பப்படும் தொழிற் சங்கங்கள் பல காலகட்டங்களின் ஊடாக புரட்சிகர வேலைத்திட்டத்தினை நோக்கிச் செல்வனஅல்ல. ஏனைய எந்தவொரு தொழிற்சங்கத்தினை காட்டிலும் நன்கு புரட்சிசரமான வேலைததிட்டத்தின் அடிப்படையில் ஆரபபிக்க வேண்டியதன் அவசியம் அதனாலேயே ஏற்படுகின்றது, புரட்சிம்யூனிஸ்ட் கழகம் ஆரம்பித்துள்ள தொழிற் சங்கத்தை கட்டி எழுப்பும் பொருட்டு சகல தோட்டத் தொழிலாளியும் தியாகத்துடன் பங்குகொள்ள வேண்டும். தொழிலாள வர்ககத்தின் ஒரு பிரிவினராக தமது சகல உரிமைகளையும் காக்கும் புரட்சிகரப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்கான ஒரே வழி அதுவே;

★ தோட்டத் தொழிலாளரின் குடியுரிமையை உறுதி செய்! இந்தியாவுக்கு நாடுசடத்துவதை நிறுத்து!

தோட்டங்களை தனியார் மயமாக்குவதை நிறுத்தி, தோட்டப்புற இளைஞர்களுக்கு தொழில் வழங்கு!

★ அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கும் சகல கொடுப்பனவுகளையும் தோட்டத் தொழிலாளருக்கும் வழங்கு!

★ ரூபா. 3500/- குறைந்த பட்ச மாதச் சம்பளத்தினை தோட்டத் தொழிலாளர்களுக்கு உறுதி செய்வதோடு, சம்பளக் குறைப்பு இல்லாமல், கிழமை வேலை நேரத்தைக் குறை!

★ தோட்டங்களில் ஆஸ்பத்திரி, கல்வி வசதிகளை ஏனைய பிரதேச மட்டத்துக்கு உத்தரவாதம் செய்!

★ தோட்டங்களை சிறு சிறு துண்டுகளாக சிங்கள விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதை நிறுத்தி, தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கப் பட்ட விவசாய இயக்கமாக்கு!''

மேலே குறிப்பிட்ட இடைமருவு கோரிக்கைகளுக்கான .போராட்டமானது தோட்டத்தொழிலாளர், நகர்ப்புற தொழிலாளர்களின் கூட்டினை உறுதிப்படுத்துவதன் மூலம் ஒடுக்கப்படும் மக்களை அவர்களைச் சூழ அணிதிரட்டி யூ. என். பி யை வெளியேற்றி, தோட்டங்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் நஷ்டஈடு இல்லாமல் தேசியமயமாக்குவது உட்பட சோசலிச வேலைத்திட்டத்துக்குச் சபதம் பூண்ட தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண நும் போராட்டத்தின் ஒரு பாகமாகும்,

இந்தப் போராட்டத்தின் வெற்றியை உறுதி செய்வதானது (அ) தொழிலாளர்கள் தமது அனைத்துலக வர்க்க சகோதரர்களுடன் ஐக்கியத்தை உண்டுபண்ணுவதிலும் (ஆ) நகர்ப்புற, தோட்டப்புறம் உட்பட விவசாயத் தொழிலாளர்களின் ஐக்கியத்திலும் (இ) ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினதும் கிராமப்புற ஏழை விவசாயிகள், இளைஞர்களை தொழிலாள வர்க்கத்தினைச் சூழ அணிதிரட்டுவதிலுந் தங்கியுள்ளது.

இதற்கு அவசியமான நடவடிக்கை குழுக்களை சகல தோட்டங்களிலும் வேலைத் தலங்களிலும் கட்டி எழுப்ப வேண்டும். துரோகத் தலைவர்களின் உதவியோடு முதலாளித்துவ அரசினாலும் பாசிச குண்டர்களாலும் தொடுக்கப்படும் தாக்குதலகளுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு, நடவடிக்கைக் குழுக்களின் வழிநடாத்தலின் கீழ் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்புப் படை அணிகளை கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்வதன் மூலம் துரோகத் தலைமைகளிடமிருந்து தொழிலாளர்களை பிரித்து, அவர்களை புரட்சிகரமான முறையில் அணிதிரட்ட இணையுமாறு நாம் சகல போராளிகளையும் அழைக்கின்றோம்.

# ஈக்குவடோர் ட்ரொட்ஸ்கி ...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற ஒரு சில நிமிடங்களுள் அவ்விடத்துக்கு வந்த பொலிஸ் ரோந்து கார் பொல்டாவுக்கு எதுவித வைத்திய உதவியும் வழங்காதது ஏன்? இக் கேள்விக்கு விளக்கம் அளிப்பதிலும் பொலிசார் தோல்வி கண்டனர். அத்தோடு இச் சம்பவம் தொடர்பாக கண்கண்ட சாட்சிகளிடமிருந்து வாக்கு மூலம் பதிவு செய்யவும் பொலிசார் தவறியுள்ளனர்.

நவம்பர் 26ம் திகதி கொமிட்டி சோசலிஸ்டா நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டைத் தொடர்ந்து பொலிசார் தமது கதையை மாற்றத் தொடங்கினர். 'கொமிட்டி சோசலிஸ்டா' நிறுவிய விசாரணைக் குழு டாக்சி சாரதியான பிராங்கின் மொரேராரா குரூமிடம் இருந்து சாட்சிகளைப் பெற்றுள்ள, சாரதியின் சாட்சிப்படி இவர் இந்த கொலைக்கு வசதியான வெளிச்சம் வழங்கும் பொருட்டு டாக்சி 'லைட்டை' அணைக்காமல் விட்டுவிட்டு மறுபக்கம் தள்ளி நின்றுள்ளார். அத்தோடு இந்த டாக்சி ஒரு மாஜி பொலிஸ் ஏஜன்டான குவெரோ எலிசல் டேயுக்கு சொந்தமானது எனத் தெரிய வந்துள்ளது.

# பத்தாண்டுகால இனவாத யுத்தம்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)


இனவாத யுத்தத்தின் திப்பிளம்பின் மூலம் அணைகட்டி மறித்து, நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் சமசமாஜ, கம்யூனிச. நவசமசமாஜ துரோகத் தலைவர்கள் முதலாளித்துவ சி.ல.சு க., ம. ஐ. மு. யுடன் சேர்ந்து பிரார்த்தனை செய்வதன் மூலம் பிரேமதாச ஆட்சியைச் சுற்றி நீச்சல் அடிக்கின்றனர், இந்த கிளாலிப் படகு பிரயாணிகளுக்கு எதிரான கடற்படைத் தாக்குதல்கள் பற்றி அவர்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. காலம் கடந்து சூடு தணிந்ததன் பின்னர் இவர்கள் ஜனாதிபதியை ஒரு ஆணைக்குழு அமைக்கும்படி கேட்க இடமுண்டு. இது நிர்வாணக் கோலத்தில் காட்டுமிராண்டிக் கொலைகளில் ஈடுபட்டுள்ளவனின் அம்மணக் கோலத்தை மூடிக் கொள்ள சீலைத் துண்டு வீசுவதற்கு ஒன்றும் குறைந்ததல்ல.

புளொட், ஈபீஆர்எல்எப், டெலோ. ஈரோஸ், ஈஎன்டிஎல்எப் உட்பட சகல தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களும் யூ,என்.பி. அரசாங்கத்தின் கைக்கூலிப் படைகளாக மாறியுள்ள நிலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரே இலக்கு எந்தவொரு மக்கட் படுகொலையின் மீதாகவும் சரி ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியுடனுன் பேச்சுவார்த்தைக்குச் செல்வதேயாகும்.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்தை நிறுத்து! யுத்தத்துக்கு ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ வழங்காதே! என்ற இடைமருவு கோரிக்கையினை நாம் எழுப்புகின்றோம். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தையும் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளையும்— சுயநிர்ணய உரிமை உட்பட—காக்கும் பொருட்டு அந்த புரட்சிசர வர்க்கத்தின் தியாகத்தினையும் ஊர்ஜிதம் செய்யவே அக்கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் சோசலிச சோவியத் குடியரசின் ஒரு பாகமாக இலங்கை—தமிழ் ஈழம் குடியரசினை நிறுவும் பொருட்டு அவசியமான புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு நாம் சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.


வாசியுங்கள்

விலை—25-00

தொடர்புகள்:-
ஆனந்தவக்கும்புற
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10.


# 1993: புரட்சிக் கட்..

(11ம் பக்கத் தொடர்ச்சி)

'அமைப்பு பிரேரணை' தொழில்சார் புரட்சியாளர்களைக் கொண்ட போல்ஷிவிக் பாணியிலான கட்சி பற்றிய நிலைப்பாட்டினைக் கூட சமசமாஜ கட்சி நீண்ட காலத்துக்கு முன்னரே சிரிப்புக்கிடமாக்கியுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. சோசலிச புரட்சிக்கு புறத்தே விமோசனம் காண முடியாத தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் முன்னிலையில் — இந்நிலைமையானது முக்கியம் வாய்ந்த படிப்பினைளைத் தோற்றுவித்துள்ளது. அது: போல்ஷிவிக் பாணியிலான ஒரு கட்சியை நிர்மாணிக்கும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே போராடுகின்றது.

அக்கட்சியில் சேருங்கள்; அக்கட்சியின் அரசியல், அமைப்பு இலக்குகளை வெற்றிகொள்ளும் போராட்டத்தில் இறங்குங்கள்.

1993ஐ புரட்சிக் கட்சியை நிர்மாணிக்கும் ஆண்டாக்கிக் கொள்வோமாக.


## தொழிலாளர் பாதை
### சந்தாதாரர் ஆகுங்ள்

அஞ்சல் கட்டணம் உட்பட ''தொழிலாளர் பாதை''
சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/- 3 மாதம் — ரூபா 24/-
6 மாதம் — ரூபா 48/- 1 வருடம் — ரூபா 96/-

பெயர்: ........................................................

முகவரி: ........................................................

சந்தாக் காலம்: ......... ரூபா ......... சதம் .........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''
இல—90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10.


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90இல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org